# விடுதலைப்புலிகள்

குரல் 94 வைகாசி – ஆனி 2000 அன்பளிப்பு 5/=



★ நிலமீட்பு என்ற இராணுவ அம்சமும் நிரந்தர அரசியல் விடுதலைக்கான ஆரம்பமும்
★ விடுதலைக்கான புதியதத்துவமொன்றின் முன்னுரை
★ ஆனையிறவு தளவீழ்ச்சி சிதைக்கப்பட்ட பேரினவாதத் திமிர்
★ போரின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற புகழ்பெற்ற வரலாற்றுச் சமர்
★ கருவேங்கைகள் பயணம்
★ ஆனையிறவுத்தள வீழ்ச்சி சிங்களத்தின் அதிர்வலைகள்
★ உலைக்களம்


## குடாநாட்டைமீட்கும் வரலாற்றுச்சமர்

# சிங்களஇராணுவம் திணறுகின்றது

# புலிப்படை சரித்திரம் படைக்கின்றது

ஆனையிறவுத் தளத்தொகுதிகளை அழித்து நிலம்மீட்ட புலிகள் சேனை வலிகாமம் மற்றும் தென்மராட்சியில் புதியபோர்முனைகளைத் திறந்து சிங்களப்படைகளை விரட்டியடித்து விரசாதனை புரிந்து வருகின்றது.

குடாநாட்டை மீட்டெடுக்கும் இராணுவ இலக்குடன் ஓயாத அலைகள் என்ற பெயரிலான ஒரு தொடர் சமரை, தலைவர் பிரபாகரன் அவர்கள், திட்டமிட்டு - நேரடியாக நெறிப்படுத்தி வருகின்றார். ஆக்கிரமிக்கப்பட்டிருந்த வன்னிநிலத்தின் பெரும் பகுதியையும் - குடாநாட்டின் கணிசமானநிலத்தையும் விடுவித்தவாறு புலிகள்சேனை பெருவெற்றிபெற்று முன்னேறி வருகின்றது.

இந்த இராணுவப் பிரளயத்திற்குள் சிக்கி சிங்களப்படைகள் நிலைகுலைந்து - நிர்க்கதிக்குள்ளாகி பேரழிவையும் - பெருத்த அவமானத்தையும் அனுபவித்தபடி உள்ளது.

குடாநாட்டு ஆக்கிரமிப்பென்பது சந்திரிகா அரசாங்கம் செய்த மாபெரும் வரலாற்றுத்தவறு என்ற தலைவர் பிரபாகரனின் கூற்று தீர்க்கதரிசனமான உண்மையாக நடந்தேறிவருகின்றது. தமிழரின் விடுதலைப் போராட்டமும் சர்வதேசத்தின் கவனத்தை முழுமையாக ஈர்த்துவிட்டது. சக்திவாய்ந்த உலகத் தொடர்பூடகங்களின் தலைப்புச் செய்திகளாக குடாநாட்டுப் போர்க்கள நிலவரம் உள்ளது. 21 ம் நூற்றாண்டின் முதற் தேசஅரசாக (NATION STATE) தமிழீழம் மலர்ந்து வரும் வரலாற்று நிகழ்ச்சியைக்கண்டு ஈழத் தமிழினம் குதூகலம் அடைந்து வருகின்றது.

அழிவுகரமான படையெடுப்புக்கள் - சூழ்ச்சிகரமான சமாதானப்பொதிகள் என்ற இருமுனைத் தாக்குதல் திட்டங்களுடன் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை இராணுவரீதியாகவும் - அரசியல்ரீதியாகவும் முறியடிக்க சந்திரிகா அரசாங்கம் வரைந்த ஏழு வருட வரலாற்றைக்கொண்ட நாசகாரத்திட்டத்தை புலிகள்இயக்கம் முறியடித்து விட்டது.

வடபுலப்போர்முனையில் சுழன்றடித்துவரும் ஓயாதஅலைகள் படைநடவடிக்கை சிங்களப்பேரினவாதத்தின் மூலோபாய அரசியலையும் தந்திரோபாயத் திட்டங்களையும் செயலிழக்கச் செய்து விட்டது.

ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆளணியையும் -அதிநவீன இராணுவ தளபாடங்களையும்கொண்ட முப்படைகளாலும் கவசமூட்டப்பட்ட சிங்கள இராணுவஇயந்திரம், இன்று, தமிழர்சேனையின் போர்வலுவிற்கு ஈடுகொடுக்கமுடியாது புறமுதுகிட்டோடிக்கொண்டிருக்கின்றது.

''சாத்தியமில்லை என்று ஒன்றுமில்லை'' (Nothing imposible) என்ற தாரகமந்திரத்தை செயற்படுத்தி தாந்தமாக வரித்து புலிகளின் இராணுவபலத்தை ஒடுக்க உருவாக்கப்பட்ட சிங்களவீரத்தின் சின்னங்களான கொமாண்டோ அணிகள், குடாநாட்டுப் போர்முனையில் திண்டாடியபடி உள்ளன. இத்தகைய உறுதிப்பிரமாணங்கள் ஒரு ஆக்கிரமிப்புப்படைக்கு உகந்ததாக ஒருபோதும் விளங்கமாட்டாது என்ற வரலாற்று உண்மை குடாநாட்டுப் போர்முனையில் நிதர்சனமாகிவருவதை உலகம் அவதானித்தபடி உள்ளது.

மீளமுடியாத ஒரு இராணுவத் தோல்விக்குள் சிங்களப்படைகள் சிக்குண்டிருக்கும் இந்த வேளையிலும் தமிழரின் இனப்பிரச்னையை இராணுவ வழிமுறை மூலமே தீர்ப்பது என்ற பேரினவாத நிலைப்பாட்டை சந்திரிகா அரசாங்கம் மாற்றியமைக்க முயலவில்லை.

அரச பொருளாதாரத்தின் கணிசமான பகுதியை போருக்குச் செலவிட்டு - இப்போது அதுவும் போதாதென்று போர்க்கால நிலையைப் பிரகடனப்படுத்தி மேலும் பண ஒதுக்

( 2 ம் பக்கம் பார்க்க ) →



விழாது எனஆழ வேரோடிநின்ற படைவீடு - கூர்மிளிரும் தலைவன் போர்வாளில் வீழ்ந்ததுகாண்!
பாழாக்கி, பகைவாழும் யாழ்மண்ணின் துயர்போக்க புலியணிகள் பாய்ந்தனகாண், தலைவன் படைநடத்த!


# தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# நிலமீட்பு என்ற இராணுவ அம்சமும் நிரந்தர அரசியல் விடுதலைக்கான ஆரம்பமும்

எப்போது சாத்தியமாகும்! என தமிழ்மக்கள் ஆதங்கப்பட்ட ஒரு இராணுவ நிகழ்ச்சி - அனைத்துத் தரப்பினரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியபடி - சாத்தியமாக்கப்பட்டுவிட்டது.

வடபுலமக்களது வாழ்வியல் அவலத்திற்கு முக்கிய காரணியாகவும், தமிழர்சேனையின் இராணுவ பலவளர்ச்சிக்கு பலத்த சவாலாகவும் திகழ்ந்துவந்த ஆனையிறவுப் பெருந்தளம் புலிவீரர்களால் அழித்தொழிக்கப்பட்டுவிட்டது.

தலைவர் பிரபாகரனது மதிநுட்பமான தாக்குதல் திட்டத்துடன் கூடிய துணிச்சலான - தந்திரோபாயப் படைநகர்த்தலுடன், போராளிகளின் வீரம்செறிந்த போர்த்திறனும் ஒன்றிணைந்து இந்த இராணுவ அற்புதத்தை நிகழ்த்திக்காட்டிவிட்டன.

ஆனையிறவு நிலப்பரப்பு வகித்துவரும் பூகோளத் தனித்துவத்தால் எழுந்த இராணுவ முக்கியத்துவம் காரணமாக, ஆனையிறவுத்தளம், வடபுலப்போரரங்கின் பிரதான கேந்திர நிலையாக விளங்கிவருகின்றது.

இந்தக் கேந்திர நிலத்தின் இராணுவக்கட்டுப்பாட்டை சிங்களப்படையிடமிருந்து புலிகள் இயக்கம் கைப்பற்றியதன்மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டம் பெரியதொரு அரசியல் - இராணுவ வெற்றியை தனதாக்கியுள்ளது.

ஆனையிறவு நிலமீட்பும் - அங்கிருந்து புலிவீரர்களால் கைப்பற்றியெடுக்கப்பட்ட நீண்டதூர வீச்சைக்கொண்ட ஆட்டிலறிப் பீரங்கிகளும் குடாநாட்டுச் சமர்க்களத்தின் இராணுவச் சமநிலையை புலிகள் இயக்கத்திற்குச் சார்பாகத் திசைதிருப்பிவிட்டுள்ளது.

இந்தச் சமநிலை மாற்றம் சிங்கள - பௌத்த பேரினவாத அரசாங்கத்தை நிலைதளரச் செய்துவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers Of
TAMIL EELAM
புலிகளின் குரல்

தமிழீழ விடுதலைக்கான ஆயுதப்போராட்ட வரலாற்றில் முதற்தடவையாக - சிங்கள தேசம், தொடர் அபாயங்களை உள்ளடனாகக்கொண்ட ஒரு மாபெரும் இராணுவத் தோல்வியை அனுபவித்தபடியுள்ளது.

சிங்களமக்கள்- சிறிலங்கா அரசாங்கம் - சிங்களப் படைத்துறை - பேரினவாத அமைப்புக்கள்- சிங்களத் தொடர்பூடகங்கள் — என சிங்களதேசமே இந்தத் தேசியத்தோல்வியையும் - இதன் விளைவாக குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினர் சந்திக்கப்போகும் பேரனர்த்தம்மிக்க நெருக்கடி நிலையையும் எண்ணிப் பீதியடைந்துள்ளன.

ஆனையிறவுப் பெருந்தளத்தை வெல்லப்படமுடியாத கோட்டை என்றும், வீழ்த்தப்படமுடியாத படைத்தளம் என்றும் தான் நம்பியதுபோல - சிங்கள அரசாங்கம் - உலகத்தையும் நம்பச்செய்தது.

இந்தப் பேரினவாத இராணுவ நம்பிக்கையை உடைத்தெறிந்த புலிகள் இயக்கம் போரியல்ரீதியாக ஒரு இராணுவ சாதனையைப் படைத்ததுடன், சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த்து, தமிழ் மக்களைப் பூரிப்பிலும் ஆழ்த்திவிட்டது.

புலிகள் இயக்கம் வெளிப்படுத்திய இந்தப் பலவளர்ச்சிகண்டு ஈழத்தமிழர்கள் புளகாங்கிதம் அடைந்துள்ளனர்.

தமிழர்சேனையைக் களமிறக்கி தமிழர்தாயக நிலம் முழுமையையும் படிப்படியாக மீட்டெடுக்கப் புலிப்படையால் முடியும் என்ற இராணுவ உண்மையை ஆனையிறவு வெற்றிமூலம் புலிகள்இயக்கம் தெட்டத்தெளிவாக நிரூபித்துள்ளது.

படைவலுவைப் பயன்படுத்தி - புலிகள் இயக்கம் - காலத்திற்குக் காலம் தமிழர் தாயகத்தின் கணிசமான அளவு நிலத்தை கட்டுப்பாட்டினுள் வைத்திருந்தாலும், அது ஒரு நிரந்தரமான இராணுவ அம்சமாக இருந்திருக்கவில்லை. கைமாறிக் கைமாறி ஒரு ஊசலாட்டப்போக்கிலேயே காணப்பட்டது.

ஆனால், ஓயாத அலைகள் மூன்று படைநடவடிக்கை இந்த தற்காலிக இராணுவ அம்சத்திற்கு முடிவுகட்டிவிட்டதெனலாம்.

ஆக்கிரமிக்கப்பட்ட வன்னிப்பெருநிலப்பரப்பில் பெரும் பகுதியையும் விடுவித்து - ஆனையிறவு நிலத்தையும் மீட்டெடுத்ததுடன், இப்போது, நிலமீட்பு என்ற போராட்ட இலக்கு தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நிரந்தரமான இராணுவ அம்சமாக நிலைபெற்றுவிட்டது. இதன்வாயிலாக தமிழரின் அரசியல் இலட்சியமான தமிழீழத் தனியரசு உறுதியான தளத்தில் உருவாகத் தொடங்கிவிட்டது. O

## ஆனையிறவுத்தள

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் -ஐரோப்பியக் கண்டத்தில் - வரலாற்றுத்திருப்புமுனைகளை ஏற்படுத்திய இராணுவத்தளபதிகளைப் பட்டியலிட்டு, பாரிய படைக்கலசக்தி மற்றும் ஆட்பலத்துடன் அவர்கள் புரிந்த இராணுவசாதனைகளை, மிகக்குறைந்த படைக்கலசக்தி மற்றும் ஆட்தொகையை வைத்துக்கொண்டு தலைவர் பிரபாகரன் சாதித்து வரலாற்றுச்சாதனை புரிந்துள்ளார் என இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆனையிறவுத் தோல்வி குடாநாட்டுப் படையின் இருப்பை பேராபத்திற்குள்ளாக்கிவிட்டது. அச்சமடைந்த சந்திரிகா அரசாங்கம் குடாநாட்டுப்படையைப் பாதுகாக்க வெளிநாட்டு உதவியை கோரும்அளவுக்கு நிலைமை சென்றது.

1991 இல் ஆனையிறவை படையினர் பாதுகாத்தபோது இராணுவத்தளபதியாக இருந்த ஜெனரல் வனசிங்கா இப்படிப் பதறுகின்றார், சர்வதேச சமாதானப்படையை வரவழைக்க இதுதான்தருணம். பொதுநலவாய அமைப்பிடம் உதவிகோரலாமே! என்றுள்ளார். அபாயகரமான நிலைமையைச் சமாளிக்க அபாயகரமான தீர்வுகள் தேவை என அன்னியப்படை உதவிக்கு அந்த முன்னாள் தளபதி தத்துவ விளக்கம் கொடுத்துள்ளார்.

வியட்னாமின் சைக்கோன் (கோ-சி-மின் நகரம்) நகரிலிருந்து கீ-சங்க் (Khe Sanh) என்ற இடத்திலிருந்தே அமெரிக்கப்படைகள் அவசரம்அவசரமாக வெளியேற்றப்பட்டுப்-பாதுகாக்கப்பட்டன. இந்த வரலாற்றுஉரை மனதில் வைத்தபடி, தயான் ஜெயதிலக எழுதுகின்றார் - இன்னொரு கீ-சங்கை பிரபாகரன் உருவாக்கிவிட்டார். இவ்விதமான வெற்றிகளைப் பெற அவர் மேலும் முயல்வார். என்றுள்ளார்.

தலைவர் பிரபாகரனது இராணுவப் புலமையை இவ்விதம் தயான் ஜெயதிலக விதந்துரைத்தாலும் தனது ஆய்வுக்கட்டுரையின் முடிவாக வெளிநாட்டு இராணுவ உதவிகளைப் பெற்று புலிகள்இயக்கத்தை நசுக்கவேண்டும்- ஆயுதப்போராட்டத்தை ஒடுக்கவேண்டும் என்றே வாதிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரைப் போன்றே, சிங்களப்படைகள் தற்போது சந்தித்துவரும் பாரிய இராணுவத் தோல்வியிலிருந்து அது மீண்டுவந்து - புலிகளை போரில் வெல்லவேண்டும் என்றே சிங்களத் தொடர்பூடகங்களும்- பேரினவாதப் புத்திஜீவிகளும் வலியுறுத்தி வருகின்றனர். O

ஈட்டைச்செய்து - தனியாரின் சொத்துக்களையும் உள்வாங்கி சிங்களத்தின் போர் இயந்திரத்திற்காக செலவிட அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

ஒரு தேசியநெருக்கடிக்குள் ஒரு அரசு சிக்குண்டிருக்கும்போது நெருக்கடியின் பரிமாணங்களை இடித்துரைத்து - கொள்கை மாற்றங்களில் ஈடுபடும்படி அரசாங்கத்தை வற்புறுத்தவேண்டிய ஜனநாயக கடமையைக் கொண்டுள்ள சிங்களத் தொடர்பூடகத்துறை அவ்விதம் செய்யாமல் நெருக்கடியை மேலும் சிக்கலாக்கும் வகையில் போர்வெறி கக்கி குடாநாட்டில் சிக்குண்டுள்ள சிங்களப் படையினரை ஒரு மரணப் பொறிக்குள் தள்ள அரசாங்கத்துடன் கைகோர்த்து நிற்கின்றது. அழிவுகரமான விளைவுகளை ஏற்படுத்தவல்ல இந்தப் பொறுப்புணர்ச்சியற்ற வெறிச்செயலைக் கண்டு உலகசமுதாயம் அதிர்ச்சியடைந்துள்ளது.

இது ஒருபுறமிருக்க,

வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுப்பகுதிகளை மீட்டெடுத்த, ஓயாத அலைகள் -3 கட்டம் மூன்றின் போது வலிகாமத்தில் ஒரு முனையையும் (கிழக்கு அரியாலை) தென்மராட்சியில் ஒரு முனையையும் (தனங்கிளப்பு) முன்னேற்பாடாகத் திறந்துவைக்கத் திட்டம் வகுத்த தலைவர் அவர்கள், இப்போது, திறக்கப்பட்ட அந்த முனைகளூடாக தமிழர் சேனையை நகர்த்தி குறைந்த இழப்புக்களுடன் குடாநாட்டுச்சமரில் புலிப்படை மேலாதிக்கம்பெற வழிசமைத்துள்ளார்.

இந்தச் சண்டைகளில் சிறப்பு எல்லைப்படை மற்றும் எல்லைப்படை வீரர்களின் திறமையான செயற்பாடுகள் வெற்றிக்கு உறுதுணையாக இருந்துவருவதுடன் தமிழர் சேனையின் பலத்தையும் அதிகரிக்கச் செய்து - இறுதி வெற்றிபற்றிய நம்பிக்கையையும் உறுதியாக்கியுள்ளனர்.

சிங்களப்படைகளுக்கு எதிராக ஆயுதம் தூக்கிப்போராட எமது மக்கள் எடுத்த தீர்மானமும் - புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் வழங்கிவரும் பொருளாதாரப் பங்களிப்பும் வெற்றிகரமாக நடந்துவரும் நிலமீட்புச் சமரில் மிகமுக்கிய இடத்தை வகிக்கின்றன.

சிங்களப்படையுடன் ஒப்பிடும்போது குறைந்த எண்ணிக்கையான போராளிகளுடன், மட்டுப்படுத்தப்பட்ட ஆயுதவளத்தையும் வைத்துக்கொண்டு சமரில் வெற்றிநடைபோடும் தலைவர் பிரபாகரனின் தலைமைத்துவத்தை உலக இராணுவ ஆய்வாளர்கள் வியப்புடன் உற்றுநோக்குகின்றனர். 21ம் நூற்றாண்டின் புகழ்பூத்த இராணுவ மேதையாக, தலைவர் பிரபாகரனை, உலகம் விதந்துரைக்கத் தொடங்கியுள்ளது.

ஆனையிறவு வீழ்ச்சியுடன் குடாநாட்டுச் சமர்க்களத்தின் இராணுவ சமநிலை புலிகள் இயக்கத்திற்குச் சார்பாகத் திரும்பியுள்ளது. குடாநாட்டிலிருந்தும் ஒட்டுமொத்தமாக சிங்களப் படைகளைத் துடைத்தெறிந்து தமிழீழபோர்க்களத்தின் இராணுவ சமநிலையையும் புலிகள் பக்கம் திருப்பிவிட்டு - தமிழர் தாயகத்தை மீட்டெடுக்கும் எமது அரசியல் இலட்சியத்தை அடையும் உறுதியுடன் தமிழீழமக்கள் செயற்படவேண்டிய தருணம் இதுவாகும். இது அற்புதமான ஒரு வரலாற்றுக்கட்டம். இந்த வரலாற்றுச்சந்தர்ப்பத்தை ஈழத்தமிழர்களாகிய நாங்கள் தக்கவாறு பயன்படுத்துவோம் என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டு - புதியவரலாற்றைப் படைப்போம். O

# விடுதலைக்கான புதியதத்துவமொன்றின் முன்னுரை

மிக அண்மையில்தான் 20ம் நூற்றாண்டின் வரலாற்றினை இறுதித்தடவையாக புரட்டிப்பார்த்த உலகம், மானுட விடுதலைக்கு வழிவகுத்த அதன் இணையற்ற தலைவர்களை இனங்கண்டு இறுதிப் பாராட்டுரையும் நிகழ்த்திவிட்டு ஓய்ந்திருந்தது. சென்ற நூற்றாண்டின் வரலாற்றினை உரிய மதிப்போடு வரலாற்றுச் சேமிப்புக் கிடங்கிலிட்டு தாழிட்டது. ஆனால் இன்னமும் 20 ம் நூற்றாண்டின் வரலாறு முடியவில்லை. இவ்வரலாறு மட்டுமல்ல மானுட விடுதலையின் முழுமையான வரலாறுமே புதிய அத்தியாயமொன்றை இணைக்கவேண்டிய நிலையிலுள்ளது என்பது இப்போது உலகத்திற்கு உறைக்கத் தொடங்குகின்றது. ஆனையிறவு பெருந்தளவீழ்ச்சி என்று தொடங்கி, புலிவீரன் தன் குருதியால் எழுதும் அத்தியாயம் இது.

மானுட விடுதலையின் ஒரு பகுதியாக தமிழீழ மானுடம் மீட்கப்பட்டது எவ்விதமென மிக விரைவில் உலகம் ஆராயத் தொடங்கும் பொழுது, அல்லது பல்லாயிரமாண்டுகளுக்கு முன் உரோம சாம்ராஜ்யத்தில் அடிமைகளை விடுவிக்க முயன்ற ஸ்பாட்டகஸ் காலம்தொட்டு மனித விடுதலைக்கான தேடலின் வழி உருவான வரலாறுகளை வழிகாட்டியாகக் கொண்ட எம் தலைவன் தனது செயல்வடிவிற்கான சிந்தனைகளை எழுத்திலிடும் பொழுது, தோன்றப்போவது விடுதலைக்கான புதிய தத்துவம். அதற்கான

**வே. பாலகுமாரன்**

முன்னுரை அல்லது முகவுரை அல்லது அணிந்துரைதான் இச்சிறு கட்டுரை சொல்ல முயலும், சொல்ல விரும்பும் செய்தி.

இப்புதிய தத்துவத்தின் ஆதாரமாக அமையும் யதார்த்த உண்மைகளை பெருத்த மனத்துயரோடும் அதேவேளை பெருத்த மனமகிழ்வோடும் நாம் உலகத்தின் முன் வைக்கின்றோம். அடிமைத்தளைகளிலிருந்து தம்மை அறுத்து விடுதலையின் மேன்மையினை உயரே தூக்கிப்பிடித்த அனைத்து நாடுகளும் இச்சின்னஞ்சிறு தேசத்தின் விடுதலைக்கு எத்தனை பென்னம்பெரிய தடைகளை இடுகின்றன? இது எமது மனத்துயர். வரலாற்றின் அபூர்வமான இச் சவாலை தன்னந்தனியே எதிர்நின்று விடுதலைப்புலிகள் விடுதலைக்கான புதிய பாதை ஒன்றைச் சமைத்தமை எமக்கு மட்டுமல்ல இன்னமும் விடுதலை பெறாத அனைத்து மக்களின் மனமகிழ்வுக்குமுரிய செய்தி. குறிப்பாக கடந்த 300 ஆண்டுகளாக எத்தனை வழிமுறைகளை கையாண்டு ஒடுக்கு முறைகளிலிருந்து உலகம் விடுதலை பெற முயன்றது? அவ்வாறு விடுதலை பெற்றவை இன்று எமது விடுதலையைத் தடுக்க எத்தனை உதவிகளைச் சிங்களத்திற்குச் செய்கின்றன? ஆனால் அவ்வவ் நாடுகளின் விடுதலை வரலாறுகளின், விடுதலைப் போர்களின் பட்டறிவைப் பயன்படுத்தியே அவர்களுக்குப் பாடம் கற்பித்த தலைவன் காட்டும் விடுதலைப் பாதையின் வழிமுறை எத்தகையது?

18 ம் நூற்றாண்டின் வரலாற்றினைப் பாருங்கள். அன்று மானுட விடுதலைக்கு வழிகாட்டிய அமெரிக்க சுதந்திரப்போர், பிரான்சியப் புரட்சிகள் காட்டிய பாதைகள் ஒரு வழிமுறை. நிலவுடமைச் சமூகத்தை மாற்றி-மக்கள் இறைமைக்கு வாய்ப்பளித்து தேசியவாதத்தை முன்னிறுத்தி-ஒடுக்கப்பட்ட மக்கள் ஆயுதம் தாங்கிப் போர்புரிந்த வரலாறுகள் இவை. குடியேற்ற நாடுகளிலே ஐரோப்பியக் கண்டத்திற்கு வெளியே முதன் முறையாக விடுதலைக் காற்றினைச் சுவாசித்த நாடு அமெரிக்கா. 1776 ம் ஆண்டு யூலை 4ம் திகதி தனது விடுதலைப் பிரகடனமாக மானுட விடுதலையின் மகிமையைப் பிரகடனம் செய்த அமெரிக்கா, "எல்லா நோய்களுக்கும் மருந்துதான் விடுதலை" எனக் கூறிய தோமஸ் பெயினை இன்றளவும் பெருமிதத்துடன் நினைவிற் கொள்கின்றது. அதே போலவே 1789 யூலை 14ம் திகதி கொடுங்கோன்மையின் சின்னமாகவிருந்த பஸ்ரில் கோட்டை சிறையுடைப்போடு தொடங்கிய பிரெஞ்சுப் புரட்சியை இன்றளவும் தலைமேல் வைத்து கொண்டாடும் பிரான்சு. இவையிரண்டும் இன்று சந்திரிகா பக்கம். ஆனாலும் என்ன? இவர்களே மறந்துபோன இவர்களின் தலைவர்களான நெப்போலியன், ஜோர்ஜ் வோசிங்டன் போன்றோரின் போர் நுட்பங்கள் எம்தலைவனால் மறக்கப்பட வில்லை.

இழப்பதற்கு அடிமை விலங்கைத் தவிர வேறில்லை. பெறுவதற்கோ விடுதலைப் பொன்னுலகமுண்டு எனக் கூறிய மாக்சின் கருத்தை யொற்றி 1917 சோவியத்தில், 1949 சீனாவில், 1956 கியூபாவில், 1975 வியட்னாமில் விடுதலைப் பூகம்பங்கள் வெடித்தன. இப்புரட்சிகளுக்கூடான தேசியம், தன்னாட்சி, சமதருமம் என்கிற சூறாவளிகளால் உலகமே அதிர்ந்தது. புரட்சிகர தோற்றப்பாடுகள் எங்கும் எழுந்தன. உலக மானுட விடுதலைக்கு ஆதரவாக அணி அணியாக நாடுகள் உதவின. எதிர்ப்போர்/ ஆதரிப்போர் என அணி பிரிந்தன. ஆயுதம் உதவின. நிதியுதவின. இது ஒருவகை விடுதலைப்பாதை. ஆனால் தவித்து, தனித்து போராட முற்பட்ட எம் மக்களுக்கு இவர்கள் அன்றும் உதவவில்லை. இன்றும் உதவவில்லை. உண்மையிலே இன்று சிங்களத்திலே புலிகளை அழிக்க வெளிநாட்டுதவி வேண்டும் என கூக்குரலிடுவோரில் முதன்மையாளரான முன்னாள் பொதுவுடமைவாதி தயான் கூறுகிறார். 'ருஷ்யாவின், சீனாவின், வியட்னாம் நாடுகளின் உதவியைத் தன்னும் பெற்று புலிகளை உடன் அடக்குங்கள். எப்படிப் போகின்றது கதையென்று பார்த்தீர்களா? சோவியத், சீன மக்களின் புரட்சிகளை வியட்னாமியரின் வீரம் செறிந்த வரலாற்றினை இதைவிட வேறு எவ்வகையில் இழிவுபடுத்த முடியும்?

இத்தகையதொரு வேறுபாடான சூழலில் எம் தலைவர் என்ன செய்தார்? பாரிய இராணுவ வலிமையுள்ள ஏகாதிபத்தியங்களை-அவை கூட்டுச் சேர்ந்து படையெடுத்த நிலையிலும் கூட எவ்வாறு இந்நாடுகள் முறியடித்தன என்கிற வித்தையைக் கற்றார். மாவோ படித்த சன்ரூவை, மாவோவை, கியாபவை இன்னும் பல வல்லுநர்களைக் கற்றார். எல்லாவற்றையும் தொகுத்து - பகுத்து அவற்றின் விளைவாக புதியதொரு பாதையை பிறப்பித்தார். இத்தகைய நிலையில உலகம் சொல்வதைக் கவனியுங்கள். பிரபாகரனுக்கு ஆனையிறவு என்பது இன்னொரு டியன் - பியன் - பூ. எமக்கொரு ஐயம்? உலகத்திற்கு உண்மையிலே உண்மை விளங்கிவிட்டதா? தமிழீழ மக்கள் தமது இறையாண்மையை புலிகள் மூலம் பிரயோகிப்பது தடுக்கப்பட முடியாதது என்பதை உணர்ந்து விட்டதா? ஏனென்றால் 1954 ம் ஆண்டு மே 7ம் திகதி டியன் - பியன்-பூ தளம் வீழ்ந்தபின் நடந்தேறிய விளைவுகள் — — தமிழீழத்தில், சிறிலங்காவில் நடக்கும் என உலகம் எதிர்பார்க்கின்றதா?

இத்தளத்தின் வீழ்ச்சிக்கு முன் இத்தளத்தினை பார்வையிட்ட அமெரிக்க இராணுவ மேலாளர் இது அசைக்க முடியாத கோட்டை என்றதும் - தனது போக்குவரத்து குண்டு வீச்சு விமானங்களை கொடுத்துதவியதும் - பின்,தளம் வீழ்ந்தபின் மௌனம் காத்ததும்-இத்தள வீழ்ச்சியின் விளைவாக அன்றைய பிரான்சிய கூட்டரசு கவிழ்ந்ததும் - 8 வருட இந்தோசீனப் போர் முடிவுற்றதும்-1954 யூலை மாதமளவில பிரெஞ்சுப் படையே வியட்னாமிலிருந்து வெளியேறியதும இன்னொரு மறுபதிப்பாகுமா? ( இன்னொரு ருசிகரமான தகவல் - இத்தளம் வீழ்ந்தபின் அமெரிக்காவின இராணுவ உதவி கோரப்பட்டபோது அமெரிக்கா இழுத்தடித்ததும்- பிரித்தானியாவும் பின்வாங்கியதும் -நிதியுதவி மட்டும் தர முன்வந்ததும் நாம் கவனிக்கத்தக்கவையல்லவா? ) இப்பொழுது நாம் சொல்கிறோம், இப்பபிறகு ஒரு டியன் - பியன் - பூ பிரபாகரனுக்கு ஒரு ஆனையிறவு - இனிவரும் உலகம் எதிர்கால வெற்றிகரமான திருப்புமுனைச சமர்களை "இது இரண்டாவது ஆனையிறவு அல்லது இது இன்னொரு ஆனையிறவு" என்று சொல்லும்.

இப்போது நாம் இறுதியாக மூன்றாவது வழிமுறையொன்றையும் நோக்கலாம். 20ம் நூற்றாண்டின் இறுதிக் காலகட்டத்தில் இவ்வழிமுறை தோன்றியது. மிக்க அதிசயமான ஆனால் அதேவேளை அபாயகரமான வழிமுறை. பனிப்போரைத் தொடர்ந்து நிலவும் புதிய உலக ஒழுங்கமைப்பில் நாடுகளின் இறைமைகள் குறித்தே புதிய கோட்பாடுகள் தோன்றக் காரணமான ஈராக்-குவைத், யூகோஸ்லாவிய சிக்கல்கள், திமோர் விடுதலை தொடர்பான வழிமுறையிது. மனிதஉரிமை மீறல்களை வலுவான காரணமாக்கி, இனப்படுகொலைகளை தடுத்து நிறுத்த படையனுப்பி பாதுகாப்பு வலயங்களை உருவாக்கி ஐ. நாவே தற்காலிகமாக நாட்டு நிருவாகங்களைப் பொறுப்பேற்று சர்வதேச அமைதிப்படையின் நிழலில் தங்கியிருக்கும் வழிமுறையிது. எத்தகைய நியாயப்பாடுகள் இருந்தாலும் இத் தலையீடுகளில்

( 15ம் பக்கம் பார்க்க )



ஆனையிறவு தளமையத்தில் தமிழர்சேனை

# ஆனையிறவு தளவீழ்ச்சி — சிதைக்கப்பட்ட பேரினவாதத் திமிர்

ஓங்கியெழுந்த புலிகள் ஓயாத அலைகள் - 03என ஆர்ப்பரித்தபோது, அடி வாங்கிப்போன ஆக்கிரமிப்புத் தளங்களின் அவலத்தின் பின்னால், புலிகளின் அடுத்த வரவுக்காக ஆனையிறவுக் களத்தில் காத்திருக்க எம் எதிரிகளுக்கு முன்னறிவிப்பு விடுக்கப்பட்டாயிற்று.

சவால்களை ஏற்று சமர்புரியக் கூடாதென்பது கெரில்லாக்களுக்கு போரியலில் ஒரு பொதுவிதி. சரித்திரத்தில் வெற்றிகள்தான் விதிகளைத் தீர்மானித்ததேயன்றி விதிகளே வெற்றிகளைத் தீர்மானித்ததல்ல. வெற்றிக்கு வீரமும், விவேகமும் வித்துக்கள். இந்த வித்துக்களிலிருந்துதான் விதிகள் பிறக்கின்றன. தலைவர் பிரபாகரன் வழிநடத்தும் சவாலுக்கான சமரில் வீரத்தையும், விவேகத்தையும் முதலிட்டு புலிப்படை ஓர் புதிய விதிசெய்யப் புறப்பட்டது. அது ஆனையிறவை வீழ்த்தி உயர்த்தும் புலிக்கொடியில், எம் நிலமேறிவந்த பகைவர் தந்த அவலத்தின் பரிசாய் தம் உயிர்கொண்டு மீளாது அந்தரிக்கவென அறைகூவிவிடும் சமராய் ஓயாத அலைகள் - 03 கட்டம் - IV என எழுந்தது.

யாழ்ப்பாணத்தின் தரைவழிப்பாதையை அடைத்துநிற்கும் தளங்களான தாளையடியும், ஆனையிறவும் எழுந்துநின்று எம்வரவை மட்டும் எதிர்பார்த்திருக்கவில்லை. எம் பாய்ச்சலுக்கான புறப்படு தளங்களையே (வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு) மீளப்பிடித்துவிடுவதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்தன. நாங்களோ ஏவப்போகும் எதிர்ப்படைகளை எப்படித் தடுப்பதென்று தயாராகிக் கொண்டிருக்கவில்லை. ஆர்ப்பரித்தெழும் ஓயாத அலைகளில எதிரி தடுத்துத் தாக்குப்பிடிக்க முடியாதபடி எப்படிப் பேரலையெனப் புரள்வது என்பதற்கே எம்மை நாம் ஆயத்தம் செய்துகொண்டிருந்தோம். சவாலைச் சந்திப்பதே இருதரப்பிற்கும் சந்தர்ப்பத்தின் நிர்ப்பந்தமாகியது.

**- பிரபுத்திரன் -**

நடக்கவிருக்கும் பெரும் சமரில் எவர் தளங்கள் எவரிடம் வீழ்ந்துவிடப்போகிறது என்பதில் யாழ் நகரத்தின் அடுத்தகட்டத் தீர்மானம் இருந்தது. இது எமக்குமட்டுமல்ல, எம் எதிரிகளுக்கும் தெரியும். யாழ் ஆக்கிரமிப்பால் அரசியல் ஆதாயம் பெற்றிருக்கும் அரசு, தீர்வு எனும் போர்வையில் போரையும், போர் எனும் போர்வையில் தமிழ்த்தேசிய இனப் படுகொலையையும் சர்வதேசத்திற்கான நியாயப்படுத்தல்களோடு இராணுவ பலத்தால் சாதித்துவிட எடுத்த முனைப்பை சாதாரணமாக இழந்துவிடத் துணியுமா? அல்லது மூன்று தசாப்தமாக போராட்டத்தை எதிர்த்தெழுந்த புயல்களைக் கடந்து, பூகம்பங்களைக் கடந்து முன்னேறிய இத்தேசத்தின் புதல்வர்கள், ஆக்கிரமிப்பின் பலத்தை ஏற்று அவர்களை எம் தேசத்தை விலைபேச விட்டுவிடத்தான் தயாரா? சவாலுக்கான சமராயிற்று ஓயாத அலைகள் - 03 கட்டம்- IV;

மார்ச் - 26ம் திகதி பிற்பகற்பொழுது. ஓயாத அலைகள் கட்டம் - மூன்றில் மீட்டெடுத்த கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, ஆழியவளை கடற்கரை ஓரமெங்கும் போராளிகள் தங்கள், தங்கள் ஒன்றுகூடும் இடங்களில் ஒன்றுகூடியிருந்தனர். வெவ்வேறு சமரமுனைக்காகவும், சமர்முனையில் வெவ்வேறு கடமைகளிற்காகவும் பிரிந்து செல்லப்போகும் போராளிகள் விடைகொடுப்பதும் விடைபெறுவதுமாக ஆரவாரித்திருந்தனர். பெருங்கடலில் அடித்துக்கொண்டிருந்த அலைகளின் இரைச்சல் காதில் விழுந்துகொண்டிருந்தது. அணிகள் தத்தமது கடமைகளிற்காக தமது கட்டளைத் தளபதிகளுடன் பிரிந்தன.

பிற்பகற் பொழுதில் சரித்திரப் பதிவாகப்போகும் தரையிறக்கத்திற்கான படைத்தொகுதிகள் கடற்கரையில் அணி திரண்டன. தரையிறக்கும் மகத்தான பணியை முடிக்கப்போகும் கடற்புலிகள் படகுகளோடு கடலிறங்கினர். ''தமிழ் வீரம் கடற்புலிகளின் கையிருப்பாகும்'' என்ற சத்திய வரிகளுக்கு இந்த வீரச்சமர் சாட்சிபகரும். தரையிறக்கும் படகுத் தொகுதிகள், கடற்படையைத் தடுத்து நிறுத்தும் தாக்குதல் படகுத் தொகுதிகளென தத்தமது அணித் தலைவர்களுடன் கடற்புலிகள் தமது கட்டளைத்தளபதி கேணல் சூசையிடம் விடைபெற்றுக்கொண்டு கடலிறங்கினர்.

தரையிறங்கும் அணிகள் உறுதிப்பிரமாணம் எடுத்து புறப்படத் தயாரானபோது, அசாதிய சாதனை புரியப்போகும் அப்போராளிகளுடன் அச்சமர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் பால்ராஜ் கூறிய இறுதி வார்த்தைகள் ''எதிரி ஆக்கிரமித்திருக்கிற எங்களுடைய யாழ் மண்ணில் மீண்டும் நாங்கள் காலடி வைக்கப் போகிறோம். நாங்கள் வெல்லப்பட முடியாதவர்கள் என்பதை எதிரிக்கு சொல்லிவைக்கப் போகிறோம். புலிகள் யார் என்பதை எதிரிக்கு காட்டப்போகிறோம். இனி யாழ் மண்ணை மீட்டெடுப்போம் புறப்படுங்கள்'' இந்த தீர்க்கமான வார்த்தைகளின் முடிவோடு நெஞ்சில் புலிகளின் தாகம் நிறைய போராளிகள் படகேறினர்.

நேரம் பிற்பகல் 6.40. வானம் இருண்டு கொண்டிருந்தது. விரிந்த கடலின் மேலே வானத்தில் முகில்களின் களங்கமிலாறி, பூத்துக்கிடந்த நட்சத்திரங்கள் கம்பீரமாய்ப் பிரகாசித்தன. மூத்த தளபதி கேணல் பால்ராஜ்கும், சோதியா, மாலதி படையணிகளின் சிறப்புத் தளபதிகளான லெப். கேணல் துர்க்கா, லெப். கேணல் விதுஷா ஆகியோரும் சாள்ஸ் அன்ரனி சிறப்புத் தளபதி லெப். கேணல் ராஜனும் படகேறிய போராளிகளுடன் கரையிலிருந்த போராளிகள், தளபதிகளுக்கு கையசைத்து விடைபெற்றனர். கடலலைகளைக் கிழித்துக்கொண்டு கடற்படைக்கு சவால்விடுக்கும் கடற்புலிகளின் தாக்குதல் படகுத் தொகுதிகள் உயரக் கடலேறின. மீண்டும் யாழ்மண் ஏகும் புலியணிகளைச் சுமந்த முதற் படகுத் தொகுதி அதன் பின்னால் நகரத்தொடங்கிற்று.



## தேசத்தின் உதயம்

சமரின் முதற் சண்டையை எதிர் கொள்ளப்போகும் சண்டைப் படகுகள் சென்றுவிட்டன. தரையிறங்கும் படகுகள் நகர்கின்றன. தாளையடித் தளத்தை தமதாக்கப் போகும் புலிகள்சேனை தளத்தின் அருகே ஒன்று கூடிவிட்டது. பீரங்கிப் படையணிகள் தயார் நிலையில். விமான எதிர்ப்புப் படையணிகள் தயார்நிலையில். மருத்துவப் பிரிவு ஆயத்தமாயிற்று. வாகனப் பிரிவு ஆயத்தம். தொலைத்தொடர்பு கருவிகள் பிசகின்றி இருந்தன. அனைத்தும் சமரைச் சந்திக்க எந்த நிமிடத்திலும் தயார் என்பதை உறுதிப்படுத்திக்கொண்ட நடவடிக்கை ஒருங்கிணைப்புக் கட்டளைத் தளபதி கேணல் பானு, நேரடியாக சமரை வழிநடத்த தன் தளம் வந்துவிட்ட தலைவருக்கு செய்தி அனுப்பினார்.

தாளையடித் தளத்தில் எதிரியின் 'ராடர்' கருவிகள் இயங்கிக்கொண்டிருந்தன. கடலில் 7கி.மீ. நேரடிச் சூட்டை வழங்கவல்ல டாங்கிகள் அங்கு நிறுத்தப்பட்டிருந்தன. எதிரியின் விநியோகக் கப்பல் தொடரணி இன்று செல்லவேண்டியிருந்ததால் வழமையைவிட கூடுதலான 'டோறா'ப் படகுகள் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தன. அவையும் 'ராடர்' கருவிகளைத் தாங்கியிருந்தன. இத்தகைய பலங்கொண்ட இருபக்க எதிர்ப்பை முறியடித்து ஆயிரக்கணக்கிலான எமது போராளிகளை தரையிறக்கும் மாபொறுப்பு கடற்புலிகளின் கையிலிருந்தது.

எதிரியின் உயர் கட்டளைப் பீடத்தை பொறுத்தவரை இவ்வாறான ஒரு தரையிறக்கம் புலிகளின் பலத்திற்கு சாத்தியமில்லையென்றே திடமாக நம்பியிருந்தான். அவ்வாறு புலிகள் முயற்சித்தாலும், புலிகளின் அணிகள் தமது தாக்குதல் முற்றுகைக்குள் அகப்பட்டுக்கொள்ளும் என்பதே அவர்களது பொதுவான கணிப்பாக இருந்தது. ஏனெனில் ஒரு இராணுவ வலயத்திற்குள் தாக்குதல் அணிகளுக்கான விநியோக மார்க்கங்களுக்கு வாய்ப்பில்லை என்பதே அதன் அடிப்படைப் பலவீனமாகும். ஆனால், எதிரி நினைப்பதைச் செய்வது போரின் உத்தியல்லவே. தலைவர் சொல்வதுபோல் ''எந்தவொரு பலத்திலும் ஏதாவதொரு பலவீனம் இருக்கவே செய்யும். அதைச் சரியாகக் கண்டறிந்து திட்டமிட்டுத் தாக்குவதில்தான் வெற்றியின் ரகசியம் தங்கியிருக்கிறது'' கடலில் முன்னேறிய தரையிறங்கும் படகுகளுக்கு இரு மணித்தியாலம் அமைதியான நகர்வில் கழிந்தது.

→

இரவு 8.45ற்கு எமது நகர்வைக் கண்டுவிட்ட எதிரி கடலில் சண்டையைத் தொடக்கினான். இம்முறை ஓயாத அலைச்சமர் அலைகளின் நடுவே தொடங்கிற்று.

கடலைக் கிழித்து படகுகள் சுழன்றன. வானத்தில் தீக்கோளங்கள் பறந்தன. கடற்புலிகளின் ஆண்,பெண் போராளிகள் உள்ளடங்கிய தாக்குதல் படகுத் தொகுதிகள் எதிரி டோறாக்களை முன்னேறவிடாது வியூகம் அமைத்து வீரப்போர் புரிந்தன. எதிரியின் 16 டோறா பீரங்கிப்படகுகள் சூழ்ந்துகொண்டு தாக்குதலில் ஈடுபட்டன. உயரக் கடலில் எதிரியின் கட்டளைக் கப்பல் இயங்கிக்கொண்டிருந்தது. கடல், வெட்டுச் சத்தங்களால் அதிர்ந்துகொண்டிருந்தது. பரந்துவிரிந்த கடற்பரப்பில் எமது தற்காப்பு வியூகத்தை உடைத்துமுன்னேற எதிரிப் படகுகளின் போர்வியூகமும், எதிரியின் போர் வியூகத்தைப் புரிந்துகொண்டு தாக்குதல் முறியடிப்பில் ஈடுபடும் எமது போர்வியூகமுமென மாறிமாறி இரு தேசத்தின் கடற்படைகள் ஒரு பெரும் சமரில் மோதிக்கொண்டன. தளபதி கேணல் சூசை கடற்சமரை வழிநடத்தினார். தரையிறங்கு படகுகள் தாமையடித் தளத்தை சமாளித்தவாறு, எமது தாக்குதல் படகுகள் வகுத்த பாதுகாப்பு வியூகத்தின் உள்ளே முன்னேறிக்கொண்டிருந்தன. இரவு 9.45ற்கு முதற் படகுத் தொகுதி குடாரப்புவில் வெற்றிகரமாய்த் தரையிறங்கியது; தளபதி கேணல் பால்ராஜ்சுடன்.

இப்பெரும் சமரின் மூலோபாய நகர்வு இத்தரையிறக்கல் நடவடிக்கைதான். தரையிறங்கும் படைத்தொகுதிகள் கண்டிவீதி வரை முன்னேறி நிலையெடுத்துக்கொள்ளும். தேவையேற்படின் கிளாலிவரை அது மேலும் முன்னேறி நிலையெடுக்கும். இதன் வெற்றிகரமான செயற்பாட்டின் மூலம் எதிரிக்கு நாம் தம்மைச் சூழ்ந்துகொள்வதைப் புரிய வைப்பதுடன், எதிரியின் விநியோகத்திற்கு உறுதியான ஒரு நெருக்கடியை உருவாக்குவதே இச்சமர்முனையின் நோக்கமாகும்.


எமது இச்சமர் முனையின் பணி வெற்றிகரமாக முடியும்போது, எதிரி ஆனையிறவில் நிலைகொள்வது சாத்தியமில்லையென்பதைப்



# தளபதிகள், கேணல் பால்ராஜ் - கேணல் சூசை

புரிந்துகொள்வான். எனவே, தனது பலம் முழுவதையும் திரட்டி தரையிறங்கிய இப்படைத் தொகுதியை தகர்த்தழிப்பதிலேயே ஆனையிறவின் தக்கவைப்பை அவனால் சாத்தியமாக்க முடியும், யாழ்ப்பாண ஆக்கிரமிப்பை தக்கவைக்க முடியும். இதை நிறைவேற்றாமல் எதிரியால் ஆனையிறவையோ, யாழ்ப்பாணத்தையோ, அதன்மீது கட்டப்பட்ட அரசியலையோ தக்கவைக்க முடியாது. அதேபோல, எதிரி செலுத்தப் போகும் மிகப் பயங்கரமான பலப் பிரயோகத்தை தரையிறங்கிய எமது படைத்தொகுதிகள் முறியடிக்காமல் ஆனையிறவின் வெற்றியையோ யாழ்ப்பாணத்தின் மீட்பையோ எம்மால் சாத்தியமாக்க முடியாது. ஆக்கிரமிப்பின் வெற்றியையோ, மீட்பின் வெற்றியையோ தீர்மானிக்கும் போர்க்களமாக தரையிறங்கிய அணிகள் நிலைகொண்ட இத்தாவில் பூமி மாறவேண்டியதாயிற்று. இதனால் விடுதலைப் போராட்டத்தில் வரலாறு கண்டிராத யுத்தம் பின்னர் அங்கு நடந்தேறியது.

அடிவானில் சூரியன் எழுந்தபோது தரையிறங்கும் படகுத் தொகுதிகள் தமது பணியை முடித்தன. கடற்புலிகள் தமது போராற்றலைப் புரியவைத்து மகத்தான அந்த தரையிறக்கத்தை வெற்றிகரமாக செய்துமுடித்தனர். எதிரியின் கட்டளைப் பீடம் நிகழ்வதை அறியாது நிலைதடுமாறியது; குடாரப்புவில் தரையிறங்கிய அணிகள் எதிரியின் மினிமுகாமைத் தாக்கியழித்தன. இருபது இராணுவச் சடலங்களைக் கைப்பற்றி மினிமுகாமைத் தகர்த்தழித்ததோடு, புலியணிகள யாழ் மண்ணில் ஏறி நடந்தவாறு கண்டிவீதிக்கு முன்னேறின. தரையிறக்கத்தின் முதல் வித்தாகிய மாவீரர்கள் வரலாற்றில் பெருமைமிக்க சாட்சியமாய் அவ்விடத்தில் விதைக்கப்பட்டனர்.





# தளபதி கேணல் தீபன்

விடிந்தபோது புடாரப்புவில் இருந்து கண்டிவீதி வரையான ஒரு நீள் பிரதேசம் எம்மால் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. அன்றைய விடியற் பொழுதில் எமது வரவை எதிர்பாராமல் திடீரென கண்டு ஐயப்பட்ட மக்கள், பின் பெண்போராளிகளைக் கண்டு புலிகளென ஊர்ஜிதம் செய்த பூரிப்பில் கட்டியணைத்து முத்தமிட்ட அந்த அலாதியான உணர்வு அந்தப் போராளிகளால் மட்டுமே புரிந்துகொள்ளக் கூடியது. போராளிகள் மக்களிடம் சண்டை நடக்கப்போவதாகக் கூறி இங்கிருந்து வெளியேறுமாறு வேண்டிக்கொண்டபோது தம்மிடமிருந்த உணவுகளைக் கொண்டுவந்தும், அவசர அவசரமாக உணவு தயாரித்து கொண்டோடிவந்து பரிமாறியபோது ஐந்து வருடத்தின்பின் மெய்சிலிர்த்துப் போனது போராளிகள் மட்டுமல்ல எங்கள் பூமியும்தான். அந்த உணவுகள் எம் போராளிகளுக்குப் போதுமானதா என்பதல்ல முக்கியம்; எம் உணர்வுகளுக்கு உயிர் உள்ளவரை போதுமானது. பெற்றுக்கொண்டதும் கொடுத்துக்கொண்டதுமான அந்த உணர்வுகள் மறக்கமுடியாத ஆழ்பதிவுகள் எமக்கு.

இந்த மூலோபாய நகர்வின் வெற்றி என்பது அதற்கேற்படுத்தப்போகும் விநியோகப் பாதையில் தங்கியிருந்தது. தரையிறங்கிய படைத்தொகுதிகளின் உறுதியான நிலையெடுப்பிற்கு அவற்றுக்கான தரைவழி விநியோகத்தை ஏற்படுத்துவதே அவசியம். தாழையடி, செம்பியன்பற்று இராணுவத் தளத்தை ஒருசில நாட்களில் தகர்த்தழித்து, வெற்றிகொண்டு தரையிறங்கிய படைத்தொகுதிகளுக்கு தரைவழி விநியோகப் பாதையை ஏற்படுத்தாதுவிடின், எதிரி, எப்படி புலிகளுக்கு இப்படியான ஒரு தரையிறக்கல் நகர்வு சாத்தியமில்லையென எண்ணினானோ, புலிகள் அப்படி முயற்சித்தால் எப்படி அது முடியுமென நம்பினானோ அது நடந்து விடும் அபாயம் இருந்தது. கேள்விக்கிடமற்ற உறுதியான, உடனடியான வெற்றியை ஈட்ட வேண்டிய சமர்முனையாக தளபதி கேணல் தீபன் வழிநடத்தும் தாழையடி, செம்பியன்பற்று முனை இருந்தது.

இவ்விரு சமர்முனைகளின் வெற்றிகரமான இயக்கம், யாழ் குடாநாட்டிற்கு எதிரி அமைத்த புவியியல் ரீதியான போர்வியூகத்தைப் பொடிப்பொடியாக சிதறடிக்கும். ஆனையிறவுத்தளம் ஆணிவேரை இழக்கும். எதிரியின் வியூகத்தின் முதலுடைப்பே முடிவிற்கான ஆரம்பமாக அமைவதாக ஓயாத அலைகள் - 03 வடபோர்முனை கட்டம் -IV இன் திட்டம் தலைவரால் தீட்டப்பட்டிருந்தது. இத்தகைய மிக நுட்பமான திட்டமிடலின் நிறைவேற்றல் அபாயத்தின் மையத்தில் நின்று, சவால்களை எதிர்கொண்டு சாதிக்கவேண்டியிருந்ததால் இத்தாக்குதலுக்கான பயிற்சி நடவடிக்கைகளைக்கூட தலைவர் நேரடியாக போராளிகளுடன் நின்று கண்காணித்து வந்தார்.

தரையிறங்கிய அணிகள் திட்டத்தின்படி கண்டி வீதிவரை முன்னேறி நிலையெடுத்துக் கொண்டதும், தாழையடி தளம் மீதான தாக்குதல் 27ம் திகதி காலை தொடங்கிற்று லெப். கேணல் விநோத்தின் தலைமையில். ஆண், பெண் அணிகளைக்கொண்ட கடற்புலிகளின படைத்தொகுதி 27ம் திகதி காலை 6.00மணிக்கு எதிரித் தளம்மீது பாய்ந்தது. இத்தளத்தின் முக்கியத்துவம் கருதியும், எமது தாக்குதலை எதிர்பார்த்தும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எதிரியின் முன்னணிப் படைப் பிரிவான 53வது டிவிசனின் கொமாண்டோக்கள், பாய்ந்த புலியணிகளை எதிர்கொண்டனர்.

சண்டை மிகவும் உக்கிரமானதாக இருந்தது. சிறப்புப் பயிற்சிபெற்ற இருதேசங்களின் அணிகளுக்கிடையேயான போர் அது. மிகப் பலப்படுத்தப்பட்ட அரண்களையும், பின்னணியில் பலமான கட்டிடத் தொகுதிகளையும் கொண்டிருந்த எதிரியால் எமது தாக்குதலை ஓரளவு தாக்குப்பிடிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால், எதிரிக் குகையில் ஊடறுத்து நிலையெடுத்திருக்கும் எமது அணிகளுக்கான தரைவழித் தொடர்பை அடைத்துநிற்கும் இத்தளத்தை அழிக்கவேண்டிய பொறுப்பை உணர்ந்த போராளிகள், அந்த கடுமையான போரரங்கில் சண்டையிட்டார்கள். அன்றைய சண்டையில் 1200 மீ. தூரத்தை மீட்டெடுத்த எமதணிகள் அன்றைய நாளில் 400 மீ- ஐ மீண்டும் இழக்கவேண்டியேற்பட்டது. சண்டை உக்கிரம் பெற்றது. எதிரியின் முறியடிப்பு முயற்சி தீவிரம்பெற்றிருந்ததால் மீட்ட பிரதேசத்தை தக்கவைத்தபடி சண்டையை நிறுத்திய தளபதி கேணல் தீபன் அடுத்தகட்ட சண்டைக்கான மீளொழுங்குபடுத்தலில் மறுநாள் தாக்குதல் அணிகளை ஈடுபடுத்தினார். அன்று நிலைமையை அறிவதற்காக தொடர்பு கொண்ட தளபதி கேணல் பால்ராஜ் அவர்களிடம் ''நாளைக்கு விடிய பாதை திறப்பை முடிச்சு உங்களுக்கு விநியோகம் அனுப்பி வைப்போம்'' என்று உறுதியுடன் கூறிய தளபதி தீபன் மறுநாள் 29ம் திகதி அதிகாலை 3.00 மணிக்கு எதிரியின் போர்வலுவை உணர்ந்து கொண்டு புதிய தாக்குதல் உத்திகளோடும், தீர்க்கமான முடிவோடும் இரு முனைகளூடாக படைத்தொகுதிகளை முன்னேறக் கட்டளையிட்டார்.

ஒவ்வொரு காவலரணின் வெற்றிக்கும், தோல்விக்கும் போரிடுபவரின் வீரமே விடையளிப்பதாய் இருந்தது. கடற்புலிகளின் படைத்தொகுதி அந்த கடற்தளத்தை மீட்பதற்காக நிதானமாக முன்னேறி எதிரிகளைப் பின்தள்ளிச் சென்றது. இதேவேளை மேலதிக அணியாக தளத்தின் மறுபுறமாக லெப். கேணல் சேகரின் தலைமையில் லெப். கேணல் அறிவின் புலனாய்வுத்துறை தாக்குதலணி உள்ளிட்ட ஒரு படைத்தொகுதி மருதங்கேணியை நோக்கி முன்னேற எதிரி தனது முழுமையான தோல்வியை அத்தளத்தில் அடைந்தான். எஞ்சிய எதிரிகளை மருதங்கேணிப் பாலங்கடந்து ஓடச்செய்த அவமானத்தை புலிவீரம் பகைக்குப் பரிசளித்தது.

எதிரி வீரர்கள் தமது இயலாமையின் முடிவை நெருங்கியபோது மக்களையே கேடயமாக்கத் துணிந்தார்கள். தளத்திலிருந்து மீட்கப்பட்ட மக்களுள் குடும்பஸ்தர் ஒருவர் கூறினார். ''சண்டை தொடங்கியதுமே நாங்கள் வெளியேறக் கேட்டோம். அவர்கள் தடுத்தார்கள். நாங்கள் மன்றாடியபோதும் அவர்கள் மனமிரங்கவில்லை. இறுதியில் எம்மை வைத்தியசாலைக்கு முன்பாக போயிருக்குமாறு பணித்தார்கள். குழந்தைகளுடன் நாம் அங்குபோயிருந்தோம். சற்றுநேரத்தில் அப்பகுதியால் தப்பியோடிய இராணுவத்தினர் மருதங்கேணிப் பாலத்தைக் கடந்திருக்கக்கூடிய நேரத்தின் பின்னர் எங்களை இருத்திய இடத்திற்கு குறிதவறாது செல்களை ஏவினார்கள். குழந்தைகளும் நாங்களும் கதறக் கதற செல்கள் எமக்குள் வீழ்ந்தன. பலர் காயமடையச் சிலர் செத்துப் போனார்கள்'' என்று கூறிய அவர் ஆத்திரம் மேவிட ''நீங்கள் அந்த மருதங்கேணிப் பாலத்தை உடைச்சு அவர்கள் முழுப்பேரையும் உள்ளுக்கவைச்சே முடிச்சிருக்க வேணும்'' என்று உணர்ச்சிவசப்பட்டார்.

சட்டைக்காடு தொடக்கம் தாழையடி வரையிலான ஒரு நீண்ட நிலப்பரப்பில், கடல் சார்ந்துவாழ்ந்த மக்களினது வாழ்வில் துயரத்தை சுமத்தியிருந்த எதிரிகளின் வாழ்வு செழிப்பானதாக இருந்திருக்கலாம், கடலின் வளத்தை கடினமான உடலின் உழைப்பால் பெற்று, உயர்ந்த பண்பாட்டு வாழ்வை கட்டிவளர்த்த மக்கள் இடம்பெயர்ந்து ஏதிலிகளாக தொண்டர் ஸ்தாபனங்கள் கொடுக்கும் கூரை விரிப்பில் வாழ்ந்த வரலாற்றுத் துயரம் பயங்கரமானது. சொந்த நிலத்தில் தமது குடும்பத்தின் செழிப்பான வாழ்வைத் தெரியாது வெள்ளை விரிப்பு கொட்டகைகளின் கீழ் பிறந்து வளர்ந்த குழந்தைகளின் துயரம் பட்டுணர்ந்தவர்களால் மட்டுமே புரிந்துகொள்ளக் கூடியது. துயரங்களை எமக்குப் பரிசளித்த அந்தப் பகைவர்களை வென்று எம் நிலம் மீட்டதில் போராளிகளின் பெருமிதம் பெரியது; எல்லையற்றது. அந்த மக்களின் வாழ்விற்கான ஆதாரத்தை மீட்டுக்கொடுத்ததன் மகிழ்வு இழப்பின் துயரத்தைவிட வலிமைமிக்கது.

யாழ் நகரின் நுழைவாயிற் கோட்டை ஒன்றை தகர்த்தழித்து, தரையிறங்கிய எமது படைத்தொகுதிகளுக்கான விநியோகப் பாதையில் லெப். கேணல் விதுஷாவின் படைத் தொகுதியுடன் இணைந்துகொண்டன முன்னேறிய கடற்புலிகளின அணிகள். அப்போது நேரம் காலை 8.30.

இத்தளத்தின் வீழ்ச்சியோடு ஆனையிறவு இயக்கச்சிதள இராணுவம் மூன்று திசைகளால் தான் சூழப்பட்டுவிட்டதை உணர்ந்தது. மறுதிசை கிளாலி கடல் நீரேரியைக்கொண்டது. இப்போது, கிளாலியை அண்டிய சிக்கலானதும், உறுதியற்றதும்,

→





சமரின் ஒருங்கிணைப்புத் தளபதி கேணல் பானு

எமது அச்சுறுத்தலுக்குள்ளானதுமான ஒரு வீதியையே நம்பிக்கையற்ற நிலையில் . இராணுவம் பயன்படுத்திக்கொண்டிருந்தது.

27ம் திகதி பகல், தரையிறங்கிய எமது படைத்தொகுதியின் மீது எதிரி தொடுத்த தாக்குதலை மிகச் சுலபமாக எமது அணிகள முறியடித்தபோது எதிரி கண்டிவீதியில் நிலை கொண்டிருக்கும் எமது படைத்தொகுதிகளின் பலத்தை ஓரளவு உணர்ந்துகொண்டிருக்க வேண்டும். சமர் தொடங்கிய அன்றைய இரவே பளைப் பகுதியில் நிலைகொள்ள வைக்கப்பட்டிருந்த எதிரியின் ஆட்டிலறித் தளங்கள் எமது கரும்புலிகள் அணியால் தகர்த்தழிக்கப்பட்டது.

இத்தகைய எமது தாக்குதலை எதிரி பலமுறை சந்தித்ததால் மிகப் பலமாகவும், விழிப்பாகவும் ஆட்டிலறிகளுக்கான உயர் பாதுகாப்பை ஏற்படுத்தியிருந்தான். ஆனால், தம் உயிரைக் கொண்டு எதையும் உடைக்கத்துணிந்த கரும்புலிகளின் முன்னால் எதிரியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஒரு பொருட்டாக இருக்கமுடியாதே!

மக்கள் வாழ்ந்த பிரதேசத்தில் நிலைகொள்ள வைக்கப்பட்ட ஆட்டிலறித் தளத்தை அகற்றுமாறு கோரி யாழ் மக்கள் ஊர்வலம் நடாத்தினர். ஆர்ப்பாட்டம் செய்தனர். அதற்கெல்லாம் அசைந்துகொடுப்பதா ஆக்கிரமிப்புத்தனத்தின் பண்பு. அதை இப்போது துடைத்தழித்து அகற்றினர் இத்தேசத்தின் புதல்வர்கள் - கரும்புலிகள். இதற்காய் மேஜர் சுதாஜினி, மேஜர் தனுசன்| மாருதியன் ஆகிய இரு கருபபுலி வீரர்கள் தமது உயிர்களை அர்ப்பணித்தனர்.

இந்த ஆட்டிலறித் தளங்களின் தகர்ப்பால் எமது தாக்குதலை முறியடிப்பதற்கான எதிரியின முயற்சி பலவீனமடைந்தது. எமமீதான முறியடிப்புத் தாக்குதலுக்குப் போதுமான சூட்டாதரவை அவர்கள் பெறமுடியாது சிக்கலுக்குள்ளாகினர்.

எதிரியின் கட்டளைப்பீடம் நிலைமையின் இறுக்கத்தையும், எமது தாக்குதலின் நோக்கத்தையும், தரையிறங்கிய படைத்தொகுதிகளின் பலத்தையும் மதிப்பீடு செய்துகொண்டது. உடனடியாக தரையிறங்கிய எமது படைத்தொகுதிகள் மீது தாக்குதலை நடாத்தி, கண்டிவீதியைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து, தரையிறங்கிய எமது படைத்தொகுதிகளை முறியடிப்பதே தனக்கு இருக்கும் ஒரே வழியென்பதை எதிரி புரிந்துகொண்டான். இதன் பின்தான் எமது வரலாறு காணாத ரணகளம் இத்தாவில் கண்டிவீதியில் நிகழ்ந்தது.

30ம் திகதி காலை 6.30 மணிக்கு எதிரி டாங்கிகள் சகிதம் பெருமெடுப்பில் முன்னேறினான். 15.000 இராணுவத்தினரின் உயிரிற்கு மட்டுமல்ல யாழ்ப்பாண ஆக்கிரமிப்பிற்கே அவசியமாயிருந்த கண்டிவீதியின் ஒரு குறித்த பிரதேசத்தினுள் மிகக் கடுமையான போர் நிகழ்ந்தது. எமது போர்வியூகத்தை உடைப்பதற்கு எதிரி பிரமாண்டமான பலத்தை எம்மீது செலுத்தினான்: இருநாட்களில் மட்டுமே ஆயத்தப்படுத்தப் பட்ட நிலைகளிலிருந்து எமது போராளிகள் போரிட வேண்டியிருந்தது. சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி எதிர்கொண்ட இச்சண்டைக்கு அதன் சிறப்புத் தளபதி லெப். கேணல் ராஜன் தலைமை தாங்க மூத்த தளபதியான கேணல் பால்ராஜ் இதனை வழிநடாத்தினார். எமது போர் வியூகத்தை எதிரி உடைப்பதும் மீள அதை முறியடிப்பதுமாக அந்தக் கடுஞ்சமர் தொடர்ந்தது. இரவு 7.00 மணிவரை உக்கிரமாக நீண்ட சமரில் ஒரே காவலரண்கள் பலதடவை மாறிமாறி இருவர் கைகளிலும் வீழ்ந்தன. இறக்கத் தயாரில்லாத புலிகளும், விடத் தயாரில்லாத இராணுவமும் மோதிக்கொண்ட சமரின் இறுதியில் புலிவீரத்தின் சான்றாய் அன்றைய களத்தில் இராணுவம் புறமுதுகிட்டது. ஆனால், அதற்கான அர்ப்பணிப்பும், உறுதியும் நிறைந்த போராளிகளின் செயல்வீரம் மகத்தானது.

அன்று நடந்த சண்டையில் ஒவ்வொரு போராளியினது உணர்வும் சொல்லிப் புரியவைக்கக் கூடியதல்ல. அங்கு நடந்த சம்பவங்கள் ஒவ்வொன்றுமே மெய்சிலிர்க்கவைக்கும் சரித்திரப் பதிவுகள். அவற்றைப் பட்டியலிடுவது நோக்கமல்ல. ஆயினும் புரிந்து கொள்வதற்காக ஒரு சம்பவம். அன்றைய நாளில், ஒருதடவை இழந்துவிட்ட இலகு இயந்திரத் துப்பாக்கி வீரனின் காவலரணை நாம் திருப்பி மீட்க அணிகள் கடுமையாகச் சண்டையிட்டன. நீண்ட முயற்சியின் பின் அவ்வரண் மீட்கப்பட்டபோது அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த 2000 ரவைகளும் சுட்டுத் தீர்ந்துபோயிருந்தது. தன் உயிரின் இறுதி மணித்துளிவரை அவன் போராடினான். இறுதியில் வென்றான். அவனது நிலைக்கு முன்னால் 60 எதிரியுடல்கள் வீழ்ந்து பரவிக்கிடந்தன. நூற்றுக்கணக்கான வர்கள காயமடைந்திருக்கக்கூடும். அந்த ஆற்றல் மிக்க போராளி மீண்டுவந்தபோது எதிரியின் தோல்விக்கான காரணம் விளங்கிற்று. ஒரு காவலரணுக்காக எதிரி எடுத்த முயற்சியும் கொடுத்த இழப்பும் சண்டையின் உக்கிரத்தை விளங்கவைக்கும். இதை எப்படியான வீரத்தால் வெட்டிச்சாய்க்க வேண்டியிருந்தது எனபதற்கு சான்றாய் இப்படியான சாதனைச் சம்பவங்கள் சண்டையில் நடந்துகொண்டிருந்தன. சண்டையின் முடிவில் 250 இராணுவத்தினர் கொல்லப்பட 700 வரையான இராணுவத்தினர் காயமடைய ஏறத்தாழ களத்தில ஆயிரம்பேரை இழந்த எதிரி அன்றைய நீண்டசண்டையில் தோல்வியைச் சந்தித்தான்.

இச்சமரின் முதற்கட்ட திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, எதிரி சந்தித்த பேரிழப்பும். மீளொழுங்குபடுத்தலில் அவனுக்கு இருக்கக்கூடிய இடையூறுகளையும் கருத்திற்கொண்டதுடன், கண்டிவீதியில் அவன் தனது பலத்தைச் செலுத்தமுன ஆனையிறவின் பக்கவாட்டாக முகாவில் பகுதி முன்னணிக் காவலரண்களைத் தகர்த்து, ஆனையிறவையும் இயக்கச்சியையும் பிளந்து தாக்குதலில் ஈடுபடுவதற்கான சண்டை 1ம் திகதி அதிகாலை 1.30ற்கு ஆரம்பிக்கப்பட்டது.

இச்சண்டையில் எதிர்பார்த்ததை விடவும் எதிரியின் எதிர்ப்பு செறிவானதாகவும் உறுதிமிக்கதாகவும் இருந்தது. தாழையடி தளத்திலிருந்து பின்வாங்கிய துருப்பினரும் இங்கு சேர்ந்துகொண்டதால், செறிவாக்கப்பட்டு எமது தாக்குதலை எதிர்பார்த்திருந்த எதிரி கடுமையான எதிர்ப்பைக் காட்டினான். காவலரண்களைத் தகர்த்தழித்தபோதும் மேற்கொண்டு எம்மால் முன்னேற முடியாமல் போனது. அன்றைய சண்டையில் லெப். கேணல் பரிபாலினி உட்பட 53 போராளிகள் தமது உயிரைத் தியாகம் செய்தனர். எதிரிக்கு இழப்பைக் கொடுக்க முடிந்தாலும் எமது இலக்கை இதில் அடையமுடியவில்லை. ஆனால், இந்நடவடிக்கையே பின்னர் ஆனையிறவுத் தளத்தை குறைந்த ஆளணி இழப்போடு வெற்றி கொள்வதற்கு வழிவகுத்தது எனலாம்:

இத்தாக்குதல் முயற்சியின் பின் படைகளை மீளொழுங்குபடுத்தி மாற்றுத் திட்டத்தோடு மீண்டும் ஒரு தந்திரோபாய நகர்வைச் செய்வதற்கு, களத்தில் எமக்கு குறுகிய கால அவகாசம் அவசியப்பட்டது. ஆனால் இந்தக் காலஅவகாசமே எதிரிக்கு கண்டிவீதியில் நிலைகொண்டிருக்கும் எமது படைகளை முறியடிப்பதற்கான சந்தர்ப்பமாக எதிரி பயன்படுத்திக்கொண்டான். எதிரியின் முழுப் பார்வையும் கண்டிவீதியில் நிலைகொண்டிருக்கும் எமது அணிகள் மீது திரும்பியது.

02ம் திகதி 'வெளிகதற' என்ற பெரும் இராணுவ நடவடிக்கையை எதிரி கண்டி வீதியில் நிலைகொண்ட எமது படைத்தொகுதிகள் மீது தொடுத்தான்: இருநாட்களின முன் 31ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து டாங்கிகளோடு கண்டிவீதியில் தாக்குதலில் ஈடுபட்ட எதிரிகளை எதிர்கொண்ட சோதியா படையணிப் போராளிகள் வெற்றிகரமாக அதை முறியடித்திருந்தனர். அதன் தோல்வி, மிகப் பெருமளவிலான கவசப்படையின பலத்துடன் நான்காம் முறையான முயற்சியை முழுமைப்படுத்தப்பட்டதும், தீர்க்கமான வெற்றியை அடையக்கூடியதுமான ஒரு தந்திரோபாயமான முயற்சியாக அமைக்க எதிரியைத் தூண்டியது.

நீரேரியை அண்டியுள்ள பிரதேசத்தின குடாநாட்டுத் திசையிலிருந்து டாங்கிகளைப் பயன்படுத்தியும், அதேநேரம் ஆனையிறவுப் பகுதியிலிருந்து கனரக வாகனங்கள் சகிதமும் முன்னேறிவந்த எதிரி, ஊடறுத்திருந்த எமது அணிகளையே ஊடறுத்து, தனிமைப்படுத்தி முற்றுகைத் தாக்குதலுக்கு உட்படுத்த விரும்பியிருக்க வேண்டும். அப்படியே எமது பலத்தை மதிப்பிட்டு பலமடங்கு மேலான பலப்பிரயோகத்தைச் செலுத்தி எமது நிலைகளை ஊடறுத்து எதிரி உள்நுழைந்தான். இத்தகைய தாக்குதலை ஏற்கனவே எதிர்பார்த்திருந்த எமதணிகள் உள்நுழைந்த எதிரியை தமது வியூகத்திற்குள் சிக்கவைத்து சண்டையைத் தொடக்கினர். கேணல் பால்ராஜின்



120 mm பீரங்கிகளை நீருடாக நகர்த்தும் புலிவீரர்கள்: கிட்டு பீரங்கிப் படையணியின் சூட்டாதரவு, புலியணிகளுக்கு புதுரத்தம் போன்றது!

வழிநடத்தலில் பகல் 12 00 தொடக்கம் இரவுவரை நீடித்த இந்தச் சமரில் ஒரு துருப்புக் காவியும், ஒரு டாங்கியும் அழிக்கப்பட்டது. ஆறு டாங்கிகள் சேதமடைந்தன. இரு பவள் கவசவாகனங்கள் கைப்பற்றப்பட்டன. எதிரி கால்வைத்த இடமெல்லாம் பல திசைகளாலும் தாக்கப்பட்டான். மிகநெருக்கமாக, எதிரியை எதிர்கொண்டு தமது துணிச்சலால் எதிரியைத் திணறடித்தனர் போராளிகள். புலிகளின் தாக்குதல் பிரதேசத்துள் நுழைந்துவிட்ட எதிரியும், அவனது கவச வாகனங்களும் செய்வதறியாது திணறிய காட்சிகள் களத்தில் நிகழ்ந்தேறின. சண்டையின் உக்கிரத்தில் ரவை முடிந்துபோயிருந்த பெண் போராளியின் நிலைக்குள் பாய்ந்துகொண்டான் ஒரு சிப்பாய். அவனது துவக்கையே பறித்து அவனையே சுட்டுவீழ்த்தி விட்டு அடுத்த எதிரிக்காக காத்திருந்தாள் அந்த பெண்புலி. மற்றொரு இடத்தில் செல்லால் அடித்து ஒரு எதிரியைக் வீழ்த்தினாள் இன்னொரு பெண்புலி. இப்படி எவரும் எதிர்பாராத மிக நெருங்கிய சண்டையில் எதிரி தோற்கடிக்கப்பட்டான்.

அன்றைய நாள் 60 இராணுவ உடல்கள் எம்மால் மட்டும் கைப்பற்றப்பட்டன. நூற்றுக்கணக்கான இராணுவத்தினரை எதிரி இழந்திருந்தான். எமது போராளிகளை நிலைகுலையச் செய்யும் எதிரியின் தந்திரோபாயம் பலிக்காமல்போக, எதிரியையே அந்நிலைக்குள்ளாக்கினர் எமது போராளிகள். அந்தச் சண்டைபற்றி சமரின் ஒருங்கிணைப்புத் தளபதி கேணல் பானு கூறினார். ''அன்றைய இரவை



# லெப். கேணல் ராஜன்

மூன்று மணித்தியாலம் பிற்போட்டிருக்க முடிந்திருந்தால் முன்னேறிய எதிரியில் எவரையேனும்கூட மீண்டிருக்க விட்டிருக்கமாட்டார்கள் எங்களது போராளிகள். அவர்களது டாங்கிகளும்கூட மீண்டிருக்க முடியாது'' என்று - எப்படியோ எஞ்சிய எதிரிகள் அன்றைய இருளில் தப்பித்துக்கொண்டார்கள்.

4ம் திகதி அதேபகுதியில் அதே தாக்குதல் திட்டத்தோடு எதிரி மீண்டும் முன்னேறினான். இது எதிரியின் ஆறாவது முயற்சியாக இருந்தது. எதிரிக்கு 02ம் திகதியின் தோல்வி எமது பலத்தின் வெளிப்பாடு என்பதை ஏற்றுக்கொள்ள மனம் ஒப்பவில்லைப்போலும். அன்றும் இருமுனைத் தாக்குதல் மூலம் எம்மை ஊடறுத்துவிட எதிரி முயன்றான். இம்முறை பிரதான நகர்வு ஆனையிறவுப் பகுதியிலிருந்து தொடுக்கப்பட்டது. தளபதி லெப். கேணல் விதுஷாவின் தலைமையில் மாலதி படையணி முதலில் இதை எதிர்கொண்டது. இருமுனைகளில் இருந்தும் மிகக் கடுமையான சூட்டுப்பலத்தோடு எமது நிலைகளை ஊடறுத்து முன்னேறிவிட்ட எதிரியை தமது தாக்குதற் பொறிக்குள் சிக்கவைத்து திணறடித்தனர் புலிகள். காலை 7.00 மணி முதல் இரவு 8.30 வரை நிகழ்ந்த இந்த நீண்ட சண்டையில் எதிரி தனது முழுப்பலத்தையும் காட்டினான் என்று சொல்லவேண்டும். ஆனால், எமது முறியடிப்பு அணிகளின் உறுதியான போர்த்திறனின் முன்னால் எதிரி தன்னைப் பலியாக்கிக் கொண்டதைத் தவிர வேறு எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஒரு பெண்போராளி சொன்னாள் ''எங்கட கடைசி மூச்சு இருக்கும் வரைக்கும் எதிரி நினைக்கிறதை அடைய விடக்கூடாது. வந்த எதிரிகளுக்கு நாங்கள் யார் என்டதைக் காட்டிப்போட்டு விடவேணும்'' என்று இடைத்த பால்ராஜ் அண்ணாவின் உறுதிமிக்க கட்டளைகளை அவரது அருகாமையிலான வழிநடத்தலில் அன்று செய்துமுடித்தோம்'' என்று. அன்றைய முடிவின் பேரிழப்போடு எதிரி தனது திட்டத்தைக் கைவிட்டு பின்வாங்கி ஓடினான்.

எதிரியின் ஆறாவது முயற்சியும் முறியடிக்கப் பட்டது. இந்தப் பெரும் தோல்விகளைப் பொறுப்பேற்று எதிரியின் 'பெருமை மிக்க' தளபதியாக இருந்த பிரிகேடியர் கெட்டியாராச்சி பதவி விலகவோ, விலக்கப் படவோ நேர்ந்தது.

ஐந்துநாள் அவகாசத்தின் பின் புதிதாக 53வது டிவிசனுக்குப் பொறுப் பேற்ற மேஜர் ஜெனரல் சிசிற விஜயசூரியா இதுவரை பிரயோகிக்கப் படாத பலத்திரட்சி யோடு கண்டி வீதியில் ஒரு முப்முனைத்தாக்கு தலைத தொடுத்தான். அனைத்து படைக்கலன் களின் வலுவையும் பிரயோகித்த இப்முயற் சிக்குப் பின் எதிரியிடம் பிரயோகிக்க இதற்குமேல் எதுவும் இல்லாதவாறு அவனது வளங்கள் திரட்டப்பட் டிருந்தன. எனவே இதுவே அவனது இறுதி முயற்சியும் ஆயிற்று.



ஆனையிறவுப் பெருங்களத்தில் நிமிர்ந்து நிற்கிறது நெடும்பனை. பேரினவாதத் திமிரழித்து காற்றிலேறித் தவழ்கிறது தமிழர் உயிர்க்கொடி!

காலை 6.30ற்கு வரலாற்றில் மிகக்கடுமையான போரரங்கு கண்டிவீதியில் குறித்த பிரதேசத்தில் தொடங்கிற்று. கொடிகாமத்திலிருந்து முன்னேறிய எதிரியை தளபதி லெப். கேணல் துர்க்கா தலைமையில் சோதியா படையணி எதிர்கொண்டது. ஏனைய இருமுனைகளை சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி எதிர்கொண்டது. மும்முனைகளிலிருந்தும் டாங்கிகளையும், துருப்புக்காவிகளையும், பீரங்கிகளையும் பெருமளவில் பயன்படுத்தி மனிதவலுவையும், சூட்டு வலுவையும், முடிந்தளவு திரட்டி, ஒருமுகப்படுத்தி நடந்த இச்சமர், அப்பிரதேசத்தை ரணகளமாக்கியது. முற்பகற் பொழுதில் எதிரியிடம் குறித்தளவு எமது காவலரண்கள் வீழ்ச்சி கண்டன. ஒவ்வொரு காவலரணும் யாழ் குடாநாட்டில் எதிரியின் இருப்பை தீர்மானிக்க வல்லதென்றே எதிரி உணர்ந்து போரிட்டான்.

சோதியா படையணி எதிர்கொண்ட முனையில் குறித்த ஒரு இடத்தில் எதிரியின் டாங்கி ஒன்று எமது நிலைகளைத் தாக்கியழித்தவாறு முன்னேறிக் கொண்டிருந்தது. எதிரி தாக்குதலால் அவ்விடத்தில் எமது கணிசமான போராளிகள் காயமடைந்தும் வீரச்சாவடைந்தும் விட்டிருந்தனர் முன்னேறிக்கொண்டிருந்த டாங்கியை தடுத்துநிறுத்த 'டாங்கி' எதிர்ப்பு ஆயுதமும் இல்லாத நிலை. பதுங்ககழியில் இருந்த போர்க்களத்திற்கு புதிதான ஒரு பெண் போராளி மேலெழுந்து பாய்ந்து சென்று தனது கைக்குண்டை டாங்கி வந்த திசை நோக்கி வீசினாள். டாங்கி பாதையை மாற்றி, தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருந்தது. எஞ்சியிருந்த அவ்வணிகளின் தலைவி செல்வி, தனது அரணிலிருந்து இறுதிவரை தாக்கினாள். முடிவில், முன்னேறிய டாங்கி அருகே - மிக அருகே வந்தபோது தனது கைக்குண்டை வீசி தனது இறுதி முயற்சியை அவள் எடுத்தபோது அது வெற்றியளித்தது; டாங்கி நின்றது. ஆயுதத்தை வைத்து சண்டை செய்வது என்பதைவிட உயிரைவைத்து சண்டை செய்வதே அவ்விடத்தில் சாத்தியமாக இருந்தது எனலாம். அதையே எம் போராளிகள் செய்தார்கள்.

நீண்டு தொடர்ந்துகொண்டிருந்த அன்றைய சண்டையில் இழந்த காவலரண்களை மீளப்பிடிப்பதும், முன்னேறி வீதியைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முனையும் எதிரியை முறியடிப்பதும் எம் முன்னால் உள்ள பெரும் சவால்களாயிற்று. சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் துணைத் தளபதி லெப். கேணல் நேசனும், மேஜர் கோவிந்தும் இரு அணிகளுக்கும் தலைமைதாங்க துணிச்சல் மிக்க அவ்விரு சமரணிகளுக்கும் அதன் சிறப்புத் தளபதி லெப். கேணல் ராஜன் கட்டளை வழங்க, மூத்த தளபதி கேணல் பால்ராஜ் சமரை வழிநடத்தினார். நள்ளிரவு 12.30 வரை 18 மணிநேரம் ஓயாது தொடர்ந்த தொடர் சமரில், வீதியைக் கைப்பற்றும் மூர்க்கத்தனமான எதிரியின் முன்னேற்ற முயற்சி எமது ஆண், பெண் போராளிகளின் அசாத்தியமான ஆற்றலாலும், அர்ப்பணிப்பாலும் முறியடிக்கப்பட்டது. இதில் 120 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 450 இராணுவத்தினர் காயமடைந்தனர்.



# லெப். கேணல் விதுஷா

பெருமளவு கவச வாகனங்களைப் பயன்படுத்திய எதிரியின் போர் வியூகத்தை உடைத்தெறிய எமது கவச எதிர்ப்புஅணி வீரர்கள் வெளிப்படுத்திய துணிவும், அர்ப்பணிப்பும் களத்தின் ஒவ்வொரு முனையிலும் நிறைந்திருந்தது. டாங்கிகளைப் பெருமளவில் பயன்படுத்தி எமது நிலைகளை உடைத்துவிட முனைந்த இக்களத்தில், விக்ரர் கவச எதிர்ப்பு அணிப்போராளிகளின் அசாத்தியமான ஆற்றலால் எதிரி டாங்கிகள் அழிக்கப்பட்டன. செயலிழக்க வைக்கப்பட்டன. இலட்சியப் பற்றுறுதிகொண்ட ஒரு விடுதலைப் போராளியின் முன்னால் எந்தக் கவசமும் எந்தக் கருவியும் தன் அர்த்தத்தை இழக்கும் என்பதை தம் உயிரைப் பணயம்வைத்தும்; தம் உயிரை ஈய்ந்தும் நிரூபித்தார்கள் அவர்கள்.

மறுநாள் எமது பலம் சிதைக்கப்பட்டிருக்கக்கூடும் என நினைத்த எதிரி மீண்டும் முன்னேறினான். அன்றைய சமரிலும் வென்றது 'வெலிகு' நற அல்ல, தமிழர் தலைவன் வழி நடாத்தும் ஓயாத அலைகளே. ஆனையிறவு மீது மீண்டும் நாம தாக்குதல் தொடுக்கும் வரை எதிரி தன்னாலான முழு முயற்சியையும் தன் முழுப்பலத்தை திரட்டி முயன்றும் முடியாது முடங்கினான் ஒரு கிலோ மீற்றர் அகலத்தை மட்டுமே கொண்ட எமது அணிகளின் நிலைகளுக்கிடையில் இக்களத்தில் வீழ்ந்து வெடித்த செல்களை எண்ணிக் கணக்கிட முடியாது எவராலும். ஒவ்வொரு கால இடைவெளிக்குள்ளும் செல்வீழ்ந்து வெடித்த அடையாளம் பரவிக் கிடந்தது. மழைபோல தூவப்பட்டன செல்களும், ரவைகளும். இவற்றிற்குள்தான் போராளிகள் சண்டையிட்டார்கள். இந்தச் சமர்க்களத்தில்தான் வாகனத்தில் விநியோகத்தில் ஈடுபட்டார்கள் எமது வாகனப்பிரிவு போராளிகள். இக்களத்தில் நின்றுதான் எமது மருத்துவப்பிரிவு செயலாற்றிக்கொண்டிருந்தது.

தமிழர் வரலாறு கண்டிராத இந்த மோசமான களத்தில் இந்த மண்ணின் புதல்வர்கள் புரிந்த போரை தமிழர் வரலாறு மறந்து போகாது. போகவும் கூடாது.

ஆனையிறவு மீதான தாக்குதலைத் தொடங்குவதற்கு அதன் மூலோபாய நகர்வுகள் முழுமைபெற்று முற்றுப்பெற்றிருந்தன. ஆனையிறவுத் தளம் எமது விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் அதி முக்கியத்துவம் வாய்ந்த தளம். பல சமர்களைக் கண்டதளம். குடா நாடாக அமைந்த யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு இதன் கழுத்துப் பகுதியில் அமைந்த நுழைவாயிலான ஆனையிறவை தக்கவைப்பதில் தங்கியிருந்தது. வெள்ளையர்களின் ஆட்சிக்காலம் தொட்டு இன்றுவரை இதன் நிலைமை இவ்வாறுதான இருந்தது. ஆனால், அவ்ஆனையிறவு தளப்பிரதேசம் தற்காப்புச் சமருக்கேற்ற முற்றுமுழுதான சாதகத் தன்மைகொண்ட புவியியல் சூழலைக்கொண்டிருந்தது. எனவே ஆனையிறவை எவர் தம்கைகளில் வைத்திருக்கிறார்களோ அவர்களின் கையில் யாழ்ப்பாணத்தை வைத்திருக்கக்கூடிய சாத்தியமே புவியியல் சார்ந்த ராணுவ யதார்த்தமாக இருந்தது.

1991ம் ஆண்டு ஆ. க. வெ. என்ற நடவடிக்கை ஆனையிறவை வீழ்த்துவதற்காக புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பெருஞ்சமர். ஆனால், எதிரியின் கடற்படைப்பலம், ஒரு தரையிறக்கத்தின் மூலம் எமது இலக்கை வெற்றியடையாமல் தடுத்துவிடக்கூடிய வாய்ப்பை எதிரிக்கு கொடுத்தது. அதன்பின் எமது படைபல வளர்ச்சியை நாம் மேலும் உயர்நிலைக்கு இட்டுச்சென்றபோது எமது பலத்தின் மதிப்பீட்டிற்கேற்ப எதிரி காலத்திற்கு காலம ஆனையிறவு தளத்தைப் பெரிப்பித்தும் பலப்படுத்தியும் வந்தான்.

புலிகள் ஓயாத அலைகள் -03 என எழுந்தபோது வீழ்ந்த படைத்தளங்களால் எமது பலத்தைக் கண்டு சிறிலங்கா இராணுவம் திகைப்பிற்குள்ளானது. எனவே புலிகள் யாழ்ப்பாணத்தை மீட்க ஆனையிறவு மீது பாய்வார்கள் என்று எதிரி முழுமையாக நம்பியதால் முடிந்தளவு பலத்தை ஒருமுகப்படுத்தி பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஈடுபட்டான். ஆனால், ஓயாத அலைகள் 03 கட்டம் III இல் எதிரியமைத்த பாதுகாப்பு வியூகங்களில் புலிகள் முதலுடைப்பை ஏற்படுத்தினர். பரந்தன், இரசாயனத் தொழிற்சாலை, உமையாள்புரம் ஆகிய தளங்கள் ஆனையிறவின் தெற்குப் பகுதியில் புலிகளிடம் வீழ்ந்தன. அதேநேரம் பக்கவாட்டாக கடலுடன் தொடர்பை ஏற்படுத்தியதன் மூலம் ஆனையிறவின் பாதுகாப்பிற்கு உயர் வலுச்சேர்த்திருந்த கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி தளங்களையும் புலிகள் அந்நடவடிக்கையில் வெற்றிகொண்டனர்.

புலிகளின் இந்நடவடிக்கையோடு ஆனையிறவு எமது இலக்கு என்பது தெட்டத்தெளிவாயிற்று. எமது பலத்தை மதிப்பீடுசெய்து பாதுகாப்பிற்காக உயர்ந்தபட்ச முயற்சியை இராணுவம் எடுத்தது. முன்னணிப் படைப்பிரிவான 53வது டிவிசனும் 54ம் இங்கு நிலைகொள்ள வைக்கப்பட்டிருந்தன. அதன பின்னணியில் 52வது டிவிசன் நிலைகொண்டிருந்தது. இயக்கச்சி, ஆனையிறவுத்தளம் ஏறத்தாழ பன்னீராயிரம் துருப்புக்களை உள்ளடக்கியிருந்தது. இந்தப் பலமான கோட்டையே புலிகளின் தாக்குதல் இலக்காயிற்று.



களரகச் சுடுபொறியின் முக்காலி தூக்கிநடக்கிறாள், ஒரு பெண்புலி

ஓயாத அலைகள் - 03 என்ற ஒரு பெருஞ்சமரில் நாம் ஈடுபடும்போது மிகக் குறைந்தளவிலான போராளிகளின உயிர்த் தியாகத்தோடு வெற்றிகள சாதிக்கப்பட வேண்டும் என்பதே தலைவரின் கருசனையாக இருந்தது. திட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் இதுவே கருத்திலெடுக்கப்பட்டது. இச்சமரிலும் இதுவே தலைவரின் கண்டிப்பான கட்டளையாகவும் இருந்தது. இதற்கேற்பவே திட்டங்கள வகுக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தன.

காயப்படும் போராளிகளைக்கூட உயிரிழப்பில் இருந்து காத்துக் கொள்வதற்கு பெருமளவிலான முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஐந்து மாதம் தொடர்ந்த ஓயாத அலைகள் - 03ற்கு ஈடுகொடுக்கக் கூடியவாறு எமது மருத்துவப்பிரிவு தன்னைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தது. இச்சமரிலும களத்தின் முன்னணிகளமருத்துவப் போராளிகளினது திறம்மிக்க செயற்பாடுகளும், எமது மருத்துவர்கள, சத்திரசிகிச்சையாளர்களின களமுனைப் பணியும போரிடும் ஒவ்வொரு வீரனினதும் உயிரைககாக்க உறுதிமிகக செயற்பாட்டை வழங்கியிருந்தது.

இந்த மரபு ரீதியான அசாத்திய ஆற்றலமிக்க ஓயாத அலைகள் -3 தொடர் சமர்க்கு கிட்டு பீரங்கிப் படையணி அதற்கான அடிப்படைப் பலமாக அமைந்தது. அதன அபரிமிதமான வளர்ச்சியே வலுமிக்க எதிரியின் சூட்டுப் பலத்திற்கு இணையாக அல்லது அதற்கு மேலாக ஈடுகொடுக்க முடிந்தது. அரச படையின் கருவிப்பலம் என்பது எம்மைவிட பலமடங்குகள அதிகம். ஆனால் கருவியின் பயனதிறன என்பது கருவியோடு மட்டும் சம்மந்தப்பட்டதல்ல. அது இயக்கப்படும் மனிதருடனும் சம்மந்தப்பட்டது. எனவேதான எமது பீரங்கிகளின் சூட்டுப்பலம் வலுமிக்கதாக இருந்திருக்கிறது. உறுதியிக்க தாக்கத்தை அது எதிரிக்கு ஏற்படுத்தியது.

18ம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு கொதிக்கும் வெய்யிலில் தமது நகர்வுகளை முடித்திருந்த அணிகள், பீரங்கிப் படையணியின் சூட்டுப் பலத்தால் முகாவில் பகுதியில எதிரியின் முன்னணிக் காவலரண்கள தாக்கப்பட, பாய்ந்து உட்புகுந்தன, பகைத்தளம் வீழ்ந்த. இச்சமரில் பிரதானமாக இரு படைத்தொகுதிகள இயங்கின. லெப். கேணல் நாத்தாவின் தலைமையில் ஜெயந்தன் படையணிகளும், லெப். கேணல் சேகரின் தலைமையில் புலனாய்வுத்துறை தாக்குதல் அணி, மேஜர் மகாவின் தலைமையிலான சோதியா படையணி, சிறுத்தை மகளிர் அணி, 4. 1 படையணி, நிதித்துறை தாக்குதலணி ஆகியனவும் பங்கெடுத்தன. இச்சமர்முனைக் கட்டளைத் தளபதியாக ஆனையிறவு தெற்குப் பகுதி தளங்களை வீழ்த்தி தாழையடித்தளத்தை வெற்றிகொண்ட சமரின், கட்டளைத் தளபதியாக இருந்த கேணல் தீபன் தலைவரால் நியமிக்கப்பட்டார். →



ஓயாத அலைகள் - 03 பெருஞ்சமர் : விதி செப்பனிடும் மக்கள்



## லெப். கேணல் துர்க்கா

தளபதி தாத்தாவின் படைத்தொகுதிகள் எதிரிக் காவலரண் தொடரில் இரு முனைகளில் உடைப்பை ஏற்படுத்தி முன்னேறின. எதிரிக் காவலரண்களை கைப்பற்றிச் சென்ற அப்படைத்தொகுதி மறுநாள் எதிரியின் தளப்பிரதேசத்தினுள் முன்னேறத் தொடங்கியது. எதிரியின் மினிமுகாம்களையும், தளங்களையும் வெற்றிகொண்டு மாசார், சோரன்பற்று ஆகிய பிரதேசங்களை மீட்டு இயக்கச்சி பிரதான தளம்நோக்கி அது மேலும் முன்னேறிக்கொண்டிருந்தது. அதேநேரம் தளபதி சேகரின் தலைமையிலான படைத்தொகுதியின் அணிகள் இயக்கச்சிக்கும், புதுக்காட்டுச் சந்திக்கும் இடையிலான பிரதேசத்தினூடாக எதிரித் தளத்தை இருகூறாகப் பிளந்து மறுகரையின் நீரேரி நோக்கி முன்னேறவேண்டியிருந்தது. எதிரி முதல் நாள் தனது முன்னணிக் காவலரண்களை இழந்துவிட்டபோதும், மீண்டும் தடுப்பு நிலைகளை அமைத்து மேலதிக படைகளை அனுப்பி மறிப்புச் சண்டையில் தீவிரமாக ஈடுபட்டான்.

எதிரியின் ஒவ்வொரு தடுப்பையும் உடைப்பதற்கு எமதணிகள் கடுமையாகப் பாடுபட்டன. ஒரு தடுப்பை உடைத்து முன்னேறும்போது எதிரி மீண்டுமொரு தடுப்பை உள்ளே ஏற்படுத்திக் கொண்டான். இவ்வாறு தளத்தினுள்ளே மூன்று கட்டங்களில் எதிரியின் முழுமூச்சான தடுப்புச்சமரை எமதணிகள் சந்திக்க வேண்டியிருந்தது

20ம் திகதி பிற்பகல் எதிரியின் தளத்தை பிளக்கும் அணிகள் கண்டி வீதியைக் குறுக்கறுத்து முன்னேறி நிலையெடுத்துக்கொண்டன. எதிரியின் கட்டளைப்பீடம் மிக நெருக்கடியான நிலைக்கு அப்போதுதான் தள்ளப்பட்டது. ஆனையிறவு தளத்தைப் பொறுத்தவரை எதிரி உயர்ந்தபட்ச முயற்சியை எடுத்தும் அதன் தோல்வியை அவனால் தடுக்க முடியாது போயிற்று. எதிரி, முறியடிப்பிற்குத் தேவையான படைகளையும், படைக்கலங்களையும் கண்டிவீதியிலும், தாழையடியிலும் நடந்த சமரில் இழந்துபோனதால் இப்போது பெருமளவில் அதைப் பெறமுடியாது போயிற்று.

முறியடிப்புத் தாக்குதலுக்கு எதிரிக்கு பலம் சேர்ப்பது அவனது கவசப்படையணியின் டாங்கிகளே அடுத்து ஆட்டிலறிகளைக் கூறலாம். டாங்கிகளே முன்னணியில் சண்டையில் ஈடுபடுத்தக்கூடியவாறான காலாட் படையின் நம்பிக்கைக்குரிய போர்க்கருவி. ஆனால், கண்டி வீதியில் நிலைகொண்ட (ஆத்தாவில்) எமது அணிகளைத் தோற்கடிப்பதில் எதிரி எடுத்த மிகக்கடுமையான முயற்சி எதிரியின் கவசப் படையை செயலிழந்துபோகச் செய்தது. எட்டு டாங்கிகள், துருப்புக்காவிகள் அதில் அழிக்கப்பட்டதோடு, பத்திற்கு மேற்பட்டவை சேதமாக்கப்பட்டன. ஏறக்குறைய எதிரியின் கவசப்படை முடங்கிப்போயிருந்தது. இப்போது அவற்றின் உதவிகளைப் பெருமளவில் பெறமுடியாது எதிரி திணறினான்.

21ம் திகதி மதியம் இயக்கச்சி நோக்கி முன்னேறிய படைத்தொகுதி தளத்தை நெருங்கித் தாக்க, தளத்தை பிளந்து, ஊடறுத்து முன்னேறிய படைத்தொகுதி கடற்கரையை அண்மித்து நிலையெடுத்தது. கடற்புலிகளின் படகுகள் நீரேரிப் பகுதியில் கரையோரம் இருந்த எதிரிக் காவலரண்களைத் தாக்கத் தொடங்கின. எதிரிக்குப் பின்வாங்குவதையோ, தற்கொலை செய்துகொள்வதையோ, சண்டையிட்டு அழிவதையோவிட வேறு தெரிவிருக்கவில்லை. எதிரி தப்பியோடும் முடிவை எடுத்தான். இதை அவனுக்கு தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தமாக்கினர் புலிகள்.

தாழையடியின் வீழ்ச்சி, கண்டிவீதியில் புலிகளின் நிலையமைப்பு என்பவற்றுக்குப் பின் புதிதாக யாழ் குடாநாட்டின் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் காமினி பொன்சேகாவும், யாழ்ப்பாண கூட்டுப்படைத் தளபதி என்ற புதிய பதவியோடு நியமனமாகிய மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவும் ஆனையிறவுத் தளத்தின் வீழ்ச்சியைத் தவிர வேறு எதனையும் கண்டுகொள்ள முடியவில்லை.

21ம் திகதி பிற்பகல் 2·00 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து வந்த எதிரியின் வாகனங்கள் ஆனையிறவை நோக்கிச் சென்றன. சற்று நேரத்தின் பின்னால் 'றக்'குகளில் இராணுவத்தினர் யாழ்ப்பாணம் நோக்கி பின்வாங்கிக்கொண்டிருந்தனர். அதன் பின்னால் ஆட்டிலறிகளைக் கட்டியிழுத்தவாறு இராணுவம் சென்றுகொண்டிருந்தது. 'பிக்கப்' வாகனத்தில் இராணுவ அதிகாரிகள் சென்றுகொண்டிருந்தனர். வீதியை அண்மித்து நிலையெடுத்திருந்த எமதணிகள் பாய்ந்து முன்னேறின. கடற்கரையை அண்டியிருந்த பிரதேசம் வெட்டைவெளியாக இருந்ததால் முன்னேற்றத்திற்கு சாத்தியமற்றதாக இருந்தது. ஆனால், இப்போது ஆட்டிலறிகளையும் எதிரியின் தப்பித்தலையும் கண்டுவிட்ட போராளிகள் அதை அனுமதிக்காது ஆவேசத்துடன் பாய்ந்தனர்.

கனரக ஆயுதங்கள் வாகனங்கள் சகிதம் சென்றுகொண்டிருந்த எதிரியை தடுத்து நிறுத்தும் பலம், உடனடியாக அவ்விடத்தில் எம்மிடமில்லை. புவியியல் அமைப்பும் சாதகமாயில்லை. வீதியின் பின்புறத்தில் கரையோரமாக எதிரியின் தொடர் காவலரண் அமைந்திருந்தது. இத்தகைய சூழலில் இதனை வழிமறிப்பது சாதாரணமாக சாத்தியப்படக் கூடிய விடயமல்ல. ஆனால், துணிச்சல்மிக்க அவ்அணிப் போராளிகள் அதைச் சாத்தியப் படுத்தினார்கள்.

பீரங்கிப் படையின் சூட்டாதரவைப்பெற்று மிக வேகமாகவும், விவேகமாகவும் செயற்பட்ட அப்போராளிகள் எதிரியின் பின்வாங்கலைத் தடுத்துநிறுத்தி தாக்குதலில் ஈடுபட, வீழ்ந்த எதிரிகளை விட்டுவிட்டு பகைவர் நலாப்புறமும் சிதறியோடினர். கடற்கரையிலிருந்துவந்த கடுமையான எதிர்ப்பு எம்மை முறியடித்துவிட முனைந்தபோது, ஆட்டிலறியைக் காப்புக்குள் உள்ளடக்கி, அவ்வணி கடற்கரையில் நிலைகொண்ட எதிரிமீது உறுதியான தாக்குதலை தொடுத்து எதிரி நிலைகளைக் கைப்பற்றி நிலையெடுத்துக்கொண்டது. ஆட்டிலறி எமது வசமாயிற்று. எதிரியின் தரைத் தொடர்பு முற்றாக மூடப்பட்டாயிற்று.

எதிரி எதிர்பாராத இந்த நிகழ்வின்பின் எதிரிக்கு தப்பியோடுவதற்கான வாய்ப்பு அற்றுப்போனதுடன் உயர்வலுக்கொண்ட ஆட்டிலறி (152 மி. மீ) எமது கைகளிற்குள் இருப்பது எதிரிக்கு அனுமதிக்க முடியாததாகியது. எதிரி தனது கொமாண்டோப் பிரிவை கடற்கரைத் தொடர் காவலரணூடாக முன்னேறி எம்மைத் தாக்கப் பணித்தான். அதே நேரம் யாழ்ப்பாணத்தில் இருந்தும் அவனது அணி முன்னேறியது: எதிரியின் அந்த மூர்க்கத்தனமான முயற்சியை முறியடித்து அன்றைய இரவில் ஆட்டிலறியை எம் தளம் கொண்டுவந்தனர் போராளிகள்.

22ம் திகதி ஆனையிறவிற்கான அனைத்து வழிகளும் மூடப்பட்ட நிலையில், இயக்கச்சித் தளம்மீது புலிகள் தாக்கியவாறு உள்நோக்கி முன்னேற, எதிரி அன்றைய விடியலோடு அல்லிப்பளை - கிளாலி நீரேரியூடாக தப்பியோடத் தொடங்கினான். நீரினூடாகவும், நீரேரிக் கரையூடாகவும் எதிரிகள் பெருவாரியாக தப்பியோடத் தொடங்கியபோது புலிகள் தரையிலிருந்தும், நீரேரியில் படகுகள் மூலமும் தாக்கத் தொடங்கினர். எதிரி தன் உயிரைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதே வாழ்வின் இலட்சியம் என்பதுபோல ஓடினான்.

ஒருகாலம் எம்மக்கள் யாழ் குடாநாட்டின் பாதைகள் அடைக்கப்பட்டு ஆக்கிரமிப்பு நடவடிக்கையாக எதிரி 'சூரியக்கதிர்' என்று வெறிகொண்டு ஆடியபோது எம்மக்கள் லட்சக்கணக்கில் தம் உயிரைத் தக்க வைப்பதற்காக ஒன்றுகூடியகரை இக்கரைதான். உயிர் கொண்டோடிய மக்களை சுட்டுத்தீர்க்க தூரம் எட்டாதபோது விமானத்தாலும், பீரங்கியாலும் தாக்கி சின்னாபின்னமாக்கிய நீசர்கள் இவர்கள்தான். எம்மக்கள் உயிருக்காகப் போராடிய கரை இக்கரைதான். அந்தப் பகைவர்கள் மனமிரங்காது எம் மக்களின் உயிர்களைக் குடித்த கரை இதுதான். நினைக்க நெஞ்சு குமுறும் அன்றைய நாட்களின் நினைவுகள். இன்றல்ல என்றும் அதை நாம் மறந்துபோக மாட்டோம்.

படகுகளின்றி எம்மக்கள் குழந்தைகளுடன் தண்ணீரில் நடந்து தப்பிவிடும் நப்பாசையோடு போராடியபோது அவர்களை பிணமாக்கியவர்களை மறந்துவிடுவது மனிதத்தின் சுபாவமல்ல. நாம் மனிதர்களாகவே வாழ விரும்பினோம். அதற்கான பதிலைப் பெற்றுக்கொண்டது சிங்களப்படை.

நான்கு வருடத்திற்குமுன் அந்த நீரேரி ஒருமுறை சிவந்தது. அடையாளமற்றுப் பிணங்கள் கிடந்தன. அந்த அவலத்திற்கு காரணமானவர்களின் இரத்தத்தால் இன்று மீண்டும் அந்த நீரேரி சிவக்கிறது. அவர்களின் உடல்களால் கரைகள் நிறைகின்றன. ''அவலத்தைத் தந்தவர்களுக்கே அதைத் திருப்பிக்கொடு'' தமிழரின் வரலாற்று அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்ட தலைவரின் சத்திய வரிகளிவை.

ஆனையிறவில் எதிரிகள் எதையும் இழந்து உயிரைக் கொண்டோடினர். நீரேரியில் பிணம் பிணமாய்ச் சாய்ந்தனர். கையை இழந்தும் ஓடினர். காயமடைந்தும் ஓடினர். விழுவிழு ஓடினர். பிணங்கள் மிதந்தன. நீரேரி சிவந்து பரந்தது. தன் மடியில் தன் மக்களைப் பலிகொண்ட பகைவர்களின் இரத்தத்தால் பதில் தீர்த்துக்கொண்டது அல்லிப் பளை-கிளாலி நீரேரி. தப்பிப் போனவர்கள் அன்று எம்மக்கள்பட்ட அவலத்தை இப்போது உணர்ந்து

(15ம் பக்கம் பார்க்க!)




**1991** இல் ஆனையிறவுத் தளத்தைப் புலிகள் முற்றுகையிட்டுத் தாக்கியபோது வெற்றிலைக்கேணியில் ஒரு கடல்வழித் தரையிறக்கத்தை நடாத்திய சிங்களப்படை ஆனையிறவுத் தளத்தைப் பாதுகாத்தது. ஒன்பது வருடங்களின் பின் திகைப்பூட்டும் ஒரு கடல்வழித் தரையிறக்கத்தின் மூலம் புலிகள் நடாத்திய துணிகரமான ஒரு ஊடறுப்புத் தாக்குதலின் விளைவாக ஆனையிறவுத் தளம் புலிகள் வசமானது.

அன்று, வெற்றிலைக்கேணியில் சிங்களப் படைகள் தரையிறங்கியபோது அதைத் தடுத்து நிறுத்த இயலாத அளவுக்கு புலிகளின் இராணுவ பலம் இருந்தது. ஒன்பது வருடங்களின் பின், இன்று, சிங்களப்படை நிலைகொண்டிருந்த இராணுவ வலயத்திற்குள் ஒரு தரையிறக்கத்தைப் புலிகள் செய்தபோது அதை முறியடிக்க முடியாத இராணுவ இயலாமையுடன் சிங்களப்படைகள் இருந்தன. அத்துடன் புலிகளின் கட்டுப்பாட்டு வலயத்தினுள் ஒரு தரையிறக்கத்தை செய்ய முடியாத கையறு நிலையிலும் சிங்களப்படைத்துறை உள்ளது.

இந்த 9 வருடகாலத்தில் புலிப்படை பெற்றுவிட்ட இராணுவ வல்லமையை உணர்ந்து கொள்ள இந்த ஒப்புவமைகள் போதுமானவை.

ஆ. க. வெ. சமர் நடந்தவேளையில் சமரின் இராணுவ பரிமாணத்தை அனுமானித்துவிட்டு ''இலங்கைத்தீவில் இரண்டு இராணுவங்கள் உள்ளனவா!'' என பி. பி. சி. செய்தியாளர் ஒருவர் ஆச்சரியப்பட்டார். ஒன்பது வருடங்களின் பின் இந்த இரண்டு இராணுவத்தில் ஒன்றான தமிழர்சேனை ஆ. க. வெ. சமர் நடந்த பகுதிகளிலிருந்து சிங்கள இராணுவத்தை விரட்டியடித்து - மண்மீட்கும் வரலாற்றுச்செய்திகளை, பி. பி. சி உலகசேவை முன்னுரிமை கொடுத்து ஒலிபரப்பிக்கொண்டிருக்கிறது.

ஒரு சமரின் முடிவு போரின் முடிவைப் பெரிதும் பாதிக்காது. ஆனால், ஒருசில சமர்களின் முடிவுகள் போரின் முடிவிற்கு கட்டியம் கூறிவிடும். ''ரெற் வலிந்ததாக்குதல்'' [TET OFFENSIVE] என்ற பெயரில் 'வியட்கொங்' போராளிகள் அமெரிக்கப்படைகளுக்கு எதிராக நடாத்திய ஒரு பரந்த இராணுவ நடவடிக்கை வியட்னாம் விடுதலைப் போரின் முடிவுக்கு கட்டியம் கூறியிருந்தது.



# போரின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற புகழ்பெற்ற வரலாற்றுச்சமர்

பாதுகாப்புச்சுவராக ஆனையிறவுப் படைத்தளத் தொகுதிகள் உள்ளன. இவை சிங்களப் படைகளின் பிடியிலிருந்து நழுவி புலிகளின் கைகளில் வீழுமாயின் குடாநாட்டுப்படையின் இருப்பு ஆபத்திற்குள்ளாகிவிடும். இதனால் உச்சகட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் ஆனையிறவுத் தளத்தொகுதிகளை படைத்தலைமை பரிபாலித்தது.

வெற்றிலைக்கேணியைக் கைப்பற்றியபின்னர் புலிகள் ஆனையிறவைத்தாக்கத் தயாரானபோது உலகின்கவனம் ஆனையிறவுக்கான சண்டையின் பக்கம் திரும்பியது. குடாநாட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மரபுப்போர்க்கலங்கள் மற்றும் சிறப்புப்படையணிகள் ஆனையிறவுத் தளம் நோக்கி நகர்த்தப்பட்டன.

இந்த நிலையில் சிங்களப்படைகளினதும் புலிகள் இயக்கத்தினதும் மரபுப்போர் ஆற்றலைப் பரீட்சிக்கும் பொருதுகளமாக ஆனையிறவுத்தளத்திற்கான சண்டையை இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஆனையிறவைக் கைப்பற்றி அங்கிருந்து தமிழர்சேனையை நகர்த்திக் குடாநாட்டை மீட்கும் வரலாற்றுமுக்கியத்துவம் வாய்ந்த மாபெரும் தாக்குதல் திட்டமொன்றை வரைவதில் தலைவர் பிரபாகரன் தீவிர கவனம் செலுத்தினார். படைத்தரப்பு எதிர்பார்த்ததைப்போல ஆனையிறவை நேரடியாகத் தாக்குவதைத் தவிர்த்து, அதேவேளை அதன் உயிர்வாழ்வுக்கு முடிவுகட்ட மதிநுட்பமான தாக்குதல் திட்டமொன்றை வரைந்துமுடித்தார்.

திகைப்பூட்டலையும்- வேகத்தையும்- துணிச்சலையும் அடித்தளமாகக் கொண்ட ஒரு படைநகர்த்தல் தந்திரத்தை நடைமுறைப் படுத்தத் தீர்மானித்தார். கடல்வழித்தரையிறக்கம் என்பது தாக்குதற்திட்டத்தின் அடிநாதமாக இருந்தது. கரையிறங்கிய புலிகள் பகைவரின் இராணுவவலயத்தை ஊடறுத்து உள்ளே அதிகதூரம் நகர்ந்து- ஊடுருவிய நிலத்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது தாக்குதல் இலக்கு. பகைவன் சற்றுமே எதிர்பார்க்காத இராணுவ அம்சங்கள் இவை.

தலைவர் பிரபாகரனின் தலைமையில் புலிகள் நடாத்திக்கொண்டிருக்கும் ஓயாத அலைகள்-3 சமர் நடவடிக்கை தமிழீழவிடுதலைப் போரின் தலைவிதியைத் தீர்மானித்தபடி சுழன்றடித்துக்கொண்டிருக்கின்றது.

சிங்களப் பேரினவாதத்தினது ஆட்சியியலின் அரசியல்-இராணுவ முதலீட்டுத்தளமாக குடாநாடு வைக்கப்பட்டுள்ளது. சிங்களச் சிப்பாய்களின் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் குடாநாடு இருக்கும்வரை சிங்கள-பௌத்தர்களின் சர்வீசபூமிதான் இலங்கைத்தீவு என்ற பேரினவாத அரசியல் நிலைப்பாட்டிற்கு பங்கம் ஏற்படாது என அது நம்பியது. இதனால், தனது விசேட இராணுவக்கவனிப்பிற்குள் குடாநாட்டை வைத்திருந்தது.

**- எல்லாளன் -**

டாங்கிகள்- ஆட்டிலறிகள்- கவசவாகனங்கள் உட்பட சிங்களத்தரைப்படையின் மொத்த மரபுப்போர்க்கலங்களில் அரைப்பங்கிற்கும் அதிகமான படைக்கலங்கள் குடாநாட்டில் குவிக்கப்பட்டுள்ளன. சிங்களப்படையின் மொத்த ஆட்தொகையில் மூன்றில் ஒருபகுதித் துருப்புக்கள் குடாநாட்டில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்தத் துருப்புக்களில் அதனது 53 வது, 54 வது டிவிசன்களும் அடங்கும். ஒவ்வொன்றும் சுமார் ஐயாயிரம் படையினரைக் கொண்ட இவ்விரு படைத்தொகுதிகளும் போர் அனுபவம் கொண்ட படைவீரர்களாலும் சிறப்புப்பயிற்சிகள்பெற்ற கொமாண்டோ அணிகளாலும் நிரப்பப்பட்டுள்ளன. சமர் அனுபவம் வாய்ந்த சிங்களத்தின் போர்த்தளபதிகளில் பெரும்பாலானோர் குடாநாட்டுப் படையணிகளுக்குத் தலைமை கொடுக்கின்றனர். இத்தகைய சிறப்பு இராணுவ அம்சங்களை குடாநாட்டில் நிலைகொண்டுள்ள சிங்களப்படையணிகள் கொண்டுள்ளன.

புவியியல்ரீதியாக குடாநாட்டின் வாசலாகவும்-இராணுவரீதியாக குடாநாட்டின் கொத்தளமாகவுமுள்ள இராணுவ கேந்திர நிலப்பரப்பில் ஆனையிறவுப் படைத்தளத் தொகுதிகள் அமைந்துள்ளன. சுமார் முப்பதினாயிரம் படையினரைக் கொண்ட குடாநாட்டுப்படையின்

மரபுவழிப்பட்ட ஒரு ஊடுருவற் சமருக்கு புலிகள், கடல்வழி மூலம் அதுவும் பெருங்கடல் வழி மூலம் பெருந்தொகையில் புலிவீரர்களை இராணுவக் கட்டுப்பாட்டுக் கரையில் தரையிறக்கித் தாக்குவார்கள் என்று சிங்களப்படைத்துறை கற்பனையே பண்ணியிருக்கமாட்டாது. அதுவும், பலமான தாழையடித் தளத்தை மேவிக்கடந்து - குடாரப்புவில் தரையிறங்கும் புலிகள் அங்கிருந்து ஊடுருவற் போர்முறையில் உள்நோக்கி நகர்ந்து - மீண்டும் ஒரு நீர்ப்பரப்பைக் கடந்து, ஆனையிறவுத் தளத்தொகுதிகளை அசட்டை செய்தபடி முன்னேறி, 'பளை நகரையும் கடந்து முகமாலையில் போய் ஏதிகண்டிவீதியைத் துண்டாடுவார்கள் என சிங்களத் தளபதிகள் கனவுகூடக் கண்டிருக்கமாட்டார்கள். ஆனால், அது நிஜமாகவே நடந்துவிட்டது.

குடாரப்புவில் இருந்து முகமாலைவரை சுமார் 15 கி. மீ. நீளமான பாதைபோன்ற ஒடுங்கிய நிலப்பரப்பைக் கைப்பற்றி நிலைகொண்ட புலிகள் அடுத்துவந்த ஒரு சில நாட்களில் தமது போர்த்திறனை வெளிப்படுத்தி - பிடித்த நிலத்தைத் தக்கவைக்கப் போராடி - வென்ற செயல் சிங்களப்படைத்தரப்பை மட்டுமல்ல உலகின் இராணுவ மதிப்பீட்டாளர்களையும் திகைப்பில் ஆழ்த்திவிட்டது.

ஆனையிறவுப் படைத்தளம் சர்வதேச தொடர்பூடகங்களால் நன்கு அறியப்பட்ட ஒரு இராணுவ நிலையாக நீண்டநாட்களாக இருந்துவருகின்றது. தமிழீழ விடுதலைக்கான ஆயுதப்போர் ஆரம்பமானபோது தமிழ் இளைஞர்களை வதைக்கும் ஒரு சித்திரவதைக்கூடமாக - மனிதஉரிமை மீறலின் ஒரு சின்னமாக அது உலகளாவிய ரீதியில் அடையாளம் காணப்பட்டது. 1987ம் ஆண்டு ஜே. ஆரின் அரசாங்கம் குடாநாட்டு மக்கள்மீது பொருளாதாரத்தடை விதித்த வேளையில் - அதை நடைமுறைப்படுத்தும் பணியை ஏற்று - குடாநாட்டில் வாழும் பத்துஇலட்சம் மக்களின் வாழ்வியல் அவலத்திற்கு காரணமானபோது அது உலகத்தொடர்பூடகங்களில் மேலும் பிரபலப்பட்டது. 1991ம் ஆண்டு அந்தப் பெருந்தளத்தை அகற்ற புலிகள் ஒரு மரபுவழித் தாக்குதலைத் தொடுத்த வேளையில் இருபகுதிப் படைகளுக்கும் இடையே நடந்த ஒருமாதச்சமர் ஆனையிறவை ஒரு பெரும் போர்க்களமாக உலகிற்கு பறைசாற்றியது 1995இல் 'சூரியக்கதிர்' படைநடவடிக்கை மூலம் வலிகாமம் பகுதி படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டபோது, வடமராட்சி -தென்மராட்சி என்ற பாரிய நிலப்பரப்பு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தும்கூட அந்த நிலப்பரப்பில், ஒரு மரபுப்போரை புலிகள் தொடர்ந்தும் நடாத்காது வன்னிக்குப் பின்வாங்கிச் செல்லப் பிரதான காரணியாக அமைந்திருந்தது ஆனையிறவுத்தளம் ஆகும். இவ்விதம் புலிகள் இயக்கத்தின் மரபுப்போர் வளர்ச்சிக்கு குறுக்கே ஆனையிறவுத்தளம் உள்ளது என்ற இராணுவ வல்லுனர்களின் தீர்ப்பும் ஆனையிறவை பிரபல்யமான ஒரு இராணுவ கேந்திர மையமாக்கி- உலகளாவிய பிரபல்யத்தைக் கொடுத்தது. சிங்கள அரசும் தன்பங்கிற்கு அதை 'வெல்லப்படமுடியாத கோட்டை' என்றும் 'வீழ்த்தப்படமுடியாத தளம்' என்றும் வர்ணித்தது. இவ்விதம் அரசியல் - இராணுவ -உளவியல் மையமாக விளங்கிய ஆனையிறவுப் படைத்தளம் புலிகளின் பெருந்தாக்குதலுக்கு உட்பட்டபோது உலகின் முதன்மைச் செய்தியாக அது உருவெடுத்தது.

ஒட்டுசுட்டான் மீதான தாக்குதலுடன் தொடங்கிய ஓயாத அலைகள் மூன்று படை நடவடிக்கையை புலிகள் ஆரம்பித்தபோது சிங்களப்படை பாரிய இராணுவத் தோல்வியை சந்தித்தது. இந்த இராணுவத்தோல்விகளுக்கு தனது படைத்தளபதிகளின் கோழைத்தனம் தான் காரணம் என தப்புக்கணக்குப் போட்டது. அதனால், ஆனையிறவைப் புலிகள் தாக்கப் போகின்றார்கள் என்ற நிலை எழுந்ததும் சிங்கள வீரத்தின் சின்னங்களான 53 வது, 54 வது படையணிகளை அங்கே நிறுத்தியது. ஆனால், சிங்கள இராணுவவாதிகளின் நம்பிக்கை நட்சத்திரங்களான இந்தச் சிறப்புப்படையணிகளை புலிகள், சிதைத்து - சின்னாபின்னமாக்கிய போது சிங்கள அரசாங்கம், செய்வதறியாது திகைத்தது.

ஆனையிறவுத்தள அழிப்பும் - சிங்களத்துச் சிறப்புப் படையணிகளின் இயலாமையும் - இவை காரணமாக குடாநாட்டுப் படையினரின் மனதில் குடிபுகுந்துவிட்ட போர்மனச்சிதைவும் குடாநாட்டுப் போர் அரங்கில் ஒரு புதிய இராணுவ பரிமாணத்தைத் தோற்றுவித்துவிட்டன.

குடாநாட்டைத் தக்கவைக்க சிங்களப் படைகளால் இயலாது என்பதே அந்தப் புதிய இராணுவ பரிமாணமாகும். இப்புதிய இராணுவ பரிமாணம் புலிகள் இயக்கத்திற்கும் - தமிழரின் தேசியவிடுதலைப் போராட்டத்திற்கும் - உலகளாவியரீதியில் - முக்கியத்துவத்தை வழங்கிவிட்டன.

# கருவேங்கைகள் பயணம்

வழமைக்கு மாறான செயற்பாடுகள், என்றும் இல்லாத முக மாற்றங்கள், நின்று கதைப்பதற்கோ, சிரிப்பதற்கோ நேரமில்லாது அவசரமாய் கழிந்தது பொழுது. எல்லாம் அன்று மாற்றமானதாகவே இருந்தது. ஒவ்வொரு கரும்புலி வீரரும் தன்னையும் தான் கொண்டு செல்லவேண்டிய ஆயுத வெடிபொருட்களையும் இறுதி நேரம் தயார்ப்படுத்துவதில் மிக மும்மரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள்.

அவர்களிற்குள் ஏதோ ஒரு உணர்வு திரும்பத் திரும்ப அவர்களை நிறைவுபடுத்திக் கொண்டிருந்தது. அவர்களிற்காக வந்த சாப்பாட்டுப் பொட்டலங்களைக் கூட கவனிக்காது தாங்கள் கொண்டுபோகும் பொருட்களிற்கு நீர்க்காப்பு போடுவதிலும், அவற்றை சரியா என்று பரீட்சிப்பதிலும் அக்கறை கொண்டிருந்தார்கள். 24-03-2000 - அன்றைய பகற்பொழுது இப்படித்தான் அவர்களிற்குக் கழிந்தது.

பொழுது மங்கத் தொடங்கிய வேளை அவர்கள் தங்களிற்கான பொருட்களோடு புறப்படத் தயாரானார்கள். பாரம் சற்று அதிகமானதாய் இருந்தது. ஒவ்வொருவரும் தங்களிற்கு வழங்கப்பட்ட வெடிபொருட்களைவிட மேலதிகமாகவும் சில வெடிபொருட்களை கொண்டு சென்றனர். எத்தனை இரவுகள் இப்படியான எதிர்பார்ப்புகளுடனும், ஆவல்களுடனும் அவர்கள வேவுக்காக திரிந்திருப்பார்கள். அவர்களின் அந்த தேடல் முயற்சியிலே எத்தனை தோழர்களை அவர்கள் இழக்க நேர்ந்திருக்கிறது. எத்தனை நாட்கள் ஒருதுளி தண்ணீர் கூட இல்லாமல் அவர்கள் அதற்காகவே அலைந்திருப்பார்கள். எல்லாம் அவர்களின் நினைவில் நிழலாடுவதாய் இருந்தது.

'' எங்கட கையால 'சாஜ்' கட்டி 'ஆட்டி' உடைக்கோணும், எத்தனையோதரம் சந்தர்ப்பம் வந்து நழுவிற்றுது, இனியொருக்காவரும் அந்த சந்தர்ப்பத்தில் 'ஆட்டி'யை உடைச்சு அண்ணை நினைக்கிறத செய்து காட்ட வேணும்.'' இப்படி ஒவ்வொருவரின் ஆழமான உணர்வும், காற்று அவர்களோடு பேசுவதாய் உணர வைத்தது. அவர்கள் அத்தனை பாரங்களோடும் ஒவ்வொருவரிடமும் விடைபெற்றுக் கொண்டிருந்தார்கள். '' நாங்கள் போறம், இந்த முறை எப்படியும் நினைச்சத செய்துமுடிப்பம் இல்லாட்டி —.... '' சிரித்தார்கள். எல்லோரும் ஒரே அர்த்தத்தோடு சிரித்தார்கள். கைகுலுக்கினார்கள், கட்டித்தழுவினாாகள். '' ஒவ்வொருவற்ற காதுக்கும் நிச்சயமா வெற்றிச் சேதிவரும் '' என்று மூச்சைப் பேச்சாக்கினார்கள்.!

அவர்களின் பார்வை வானத்தையோ அல்லதுபூமியையோநோக்கியபடி உறுதியாய் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவர்கள் ஒவ்வொருவரது கால்களும் இலக்கை நோக்கி நடப்பதற்காக குறுகுறுத்தன. வெற்றிலைக்கேணிக் கடற்கரையிலிருந்து அவர்களின் பயணம் ஆரம்பமானது. சிறிய படகுகள் அலைகளில் சத்தமின்றி இருளோடு இருளாகப் புறப்பட்டன.

வானவிளிம்பு, உயர்ந்த பெருத்த தென்னந் தோப்புக்களையும், அடர்ந்த மரங்களையும், வெளிகளையும் பிரித்துக் காட்டியது. நட்சத்திரங்களின் மங்கிய வெளிச்சம் வானத்திலும் ஓலைக் குடிசைகள் இருப்பது போலவும், அந்த குடிசைகளின் துவாரங்களினாலேயே இந்த ஒளி கசிவதாகவும் தெரிந்தது. படகு மெல்ல மெல்ல நகர்ந்துகொண்டிருந்தாலும் அவர்களின் இதயம் வேகமாகத் துடித்துக்கொண்டிருந்தது. திட்டம், நகர்வு, தாக்குதல் என்று ஒவ்வொன்றையும் சுரம்மாறாது நினைவுகள் அசைபோட்டன.

தாழையடி இராணுவ தளத்திலிருந்து கடற்கரையை நோக்கி வெளிச்சங்கள் தெரிந்தது. அந்த வெளிச்சங்கள் அவனது சின்ன 'ரோச்' லைட்டுகளில் இருந்துதான் பிரிந்திருக்கும். அவன் ரோந்திற்காகவோ அல்லது வேறு பாதுகாப்பு ஏற்பாடு ஒன்றிற்காகவோ நகர்ந்துகொண்டிருக்கிறான், அல்லது பயத்தில் இருளை தனக்குக் கிட்டே வரவிடாது விரட்டுவதற்காக இவ்வாறு செய்கிறான் என்று மனதிற்தள் நினைத்துக் கொண்டு சிரித்தார்கள்.

படகிற்குள் மௌனம் குடிகொண்டிருந்தது. காற்று ஈரத்தை சுமந்து வீசிக்கொண்டிருந்தது. சத்தமில்லாது படகு கரையைத் தொடும் தூரத்திற்குள் வந்துவிட்டது. படகின் இரண்டு கரைகளாலும் இரு கறுப்பு உருவங்கள் தண்ணீருக்குள் குதித்தன. அவர்கள் சுமந்து செல்லும் பொருட்களின் தோற்றம் அவற்றை பெரிய மனிதர்களாக உருமாற்றிக் காட்டியது. தண்ணீருக்குள் இறங்கியவர்கள் துப்பாக்கியை மூடியிருந்த நீர்காப்பை அகற்றி சுடுவதற்குத் தயாரானார்கள். எந்த நேரமும் தாக்குதல் ஆரம்பிக்கலாம், ஏனென்றால் அது எதிரியின் கோட்டைகள் நிறைந்த இடம். செம்பியன் பற்றுக்கும் மாமூலைக்கும் இடையிலான பிரதேசத்தில் தான் இது நிகழ்ந்து கொண்டிருந்தது.

இறங்கிய இருவரும் துப்பாக்கியை சுடுவதற்கு ஏற்றவாறு பிடித்துக்கொண்டு சற்றுக்குனிந்து சத்தமில்லாது இரண்டு முனைகளிலும் பிரிந்து ஓடியது வானவிளிம்பில் தெளிவாகத் தெரிந்தது. அவர்கள் நிலையெடுத்த பின், எந்தவிதமான ஆபத்தும் தென்படவில்லையென்பதற்கு மணிக்கூட்டு வெளிச்சத்தில் சமிக்கை செய்தார்கள். அதன் பின்னே படகு கரையடைந்தது. அந்த படகிலிருந்து மற்றப் படகிற்கு சமிக்கை காட்டப்பட்டது. அதுவும் விரைந்துவந்து கரையைத் தொட்டது. ஒவ்வொருவரும் நிதானமாக எதற்கும் தயாராக படகுகளிலிருந்து குதித்தார்கள்.

அவர்களின் பார்வை இப்போது முன்னோக்கியதாக கூர்மையடைந்திருந்தது. படகில் ஏற்றிவந்தவர்களிற்கும், இதுவரை ஒன்றாகவே நின்று இறுதிக்கணமும் பிரியமனமின்றி தவித்துநிற்கும் தோழர்களிற்காகவும் ஒருமுறை திரும்பிப் புன்னகைத்தார்கள். அதற்குமேல் அவர்களிற்கு அவகாசம் கிடைக்கவில்லை. நகருவதற்கான வியூகங்கள் அமைத்து முன்னேறத் தொடங்கினார்கள். கால் புதைந்து புதைந்து எழும் அந்த மணல், கடற்கரை ஓரமாகவே வளைந்து நெளிந்துபோகும் பாதை, மணல் மேடுகளின் நடுவில் வளர்ந்திருக்கும் கண்டல்காடுகள் அவற்றினூடு அவர்களின் கால்கள் முன்னேறின.

அடர்ந்த கண்டல் காடு நிறைந்த ஒரு இடத்தில் அவர்கள் ஒன்று சேர்ந்தார்கள். அகற்றப்படாதிருந்த நீர்க்காப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டன. அங்கே தடயங்களாக இருந்த பொருட்களை மணலில் குழிதோண்டிப் புதைத்துவிட்டு மிக அவதானத்துடன் எழுந்து நடந்தார்கள். அவர்கள் போகும் திசையில் தொலைதூரத்தில் ஆட்டிலறிகள் இயங்கிய சத்தம்; அதைத் தொடர்ந்து வானத்தையும் பூமியையும் அதிர வைக்கும் சத்தம் எல்லாம் தெளிவாக கேட்டது. எல்லோருடைய மனதிலும் நம்பிக்கை; எங்களுடைய இலக்குகள் இருக்கின்றன. இனி எப்படியும் அவை அழிக்கப்பட்டுவிடும் என்று.

நடந்துகொண்டிருந்தபடியே தனது தோளை வெட்டிய வெடிமருந்துப் பொதிகளைச் சீர்செய்துவிட்டு '' சத்தம் போடுங்கோ இஞ்ச உங்களுக்கான சாமான்களோட நான் வாறனெண்டு உங்களுக்குத் தெரியாது தானே'' என்று எல்லோருக்கும் கேட்கும்படியாக கூறிவிட்டுச் சிரித்தான் தனுசன். அவனின் சுபாபமே தனித்துவமானது. உச்சி பிரித்து மேவி வாரப்பட்டிருக்கும் தலைமயிரும் கறுப்பும் சாம்பலும் கலந்த நிறத்தில் இருக்கும் அவனது கண்களும், கதைக்கும் போதும் சிரிக்கும் போதும் கண்ணை மூடிமூடித் திறக்கின்ற அசைவுகளும், உயர்ந்த உடற்கட்டான அவனுடைய உருவமும் அவனை ஒருமுறை பார்த்தவர்களின் மனதைக்கூட பற்றிக் கொள்ளும். அவனது வார்த்தையிலிருந்த உறுதியும் நகைச்சுவையும் எல்லோரையும் ஒருகணம் சிரிக்க வைத்தது.

தனுசனது கவசமே அலட்டிக் கொள்ளாது அதிகமான செயற்பாடுகள் மூலமே தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் சுபாவம்தான்.

**- கிள்ளிவளவன் -**

இலக்கிற்காக அவன் தெரிவு செய்யப்பட்டதில் இருந்து பயிற்சி எடுத்தது. அதற்காக நகர்வது அனைத்திலுமே அவனின் செயற்பாடுகளில் தன்னை இனங்காட்டிக் கொண்டான். எல்லாப் போராளிகளுடனும் அதிகமாக சிரித்துக் கதைத்தான். அடிக்கடி '' இந்த ஆட்டிலறிகளை நிச்சயமா உடைப்பன்'' என்று உறுதியாய்க்கூறி புன்னகைத்தான். இன்று, இலக்கிற்கும் அவனிற்குமான தூரங்களை காலடிகள் குறைத்துக் கொண்டிருந்தன. அவன் உறுதியோடும் தன்னம்பிக்கையோடும் இருந்தான். அவனிற்கென கொஞ்சப் பொதிகள் கொடுத்தபோதும் அவன் மேலதிகமாகவும் புறப்படும் போது தனக்கு வழங்கிய வெடிமருந்துப் பொதிகள் போதாது →

## 26.03.2000 அன்று பளையில் ஆட்டிலறிகளைத் தகர்த்து வீரச்சாவடைந்த இரண்டு கரும்புலிகள்



கரும்புலி
மேஜர் தனுசன் / மாருதியன்
( தங்கராசா இலங்கேஸ்வரன் )
திருமலை மாவட்டம்.



கரும்புலி
மேஜர் சுதாஜினி
(தெய்வேந்திரம்பிள்ளை ஜெயசுகி)
யாழ். மாவட்டம்.

# 31. 03. 2000 அன்று இயக்கச்சியில் இடம்பெற்ற கரும்புலித் தாக்குதலில் வீரச்சாவடைந்த மூன்று கரும்புலிகள்



**கரும்புலி**
**மேஜர் ஆந்திரா / தாயகம்**
**( விநாயகமூர்த்தி சுதர்சினி )**
யாழ் மாவட்டம்.



**கரும்புலி**
**கப்டன் சத்தியா**
**( கிருஸ்ணமூர்த்தி முகுந்தினி )**
யாழ் மாவட்டம்.



**கரும்புலி**
**மேஜர் மலர்விழி**
**( பாலகிருஸ்ணன் சங்கீதா )**
யாழ் மாவட்டம்.

என்று ''இன்னும் கொஞ்சம் 'சாஜ்' தாங்கோ நான் கொண்டு போவன், தேவைப்படும்'' என்று வாங்கி அதையும் சேர்த்து சுமந்து கொண்டு நடந்தான். ஒவ்வொரு வரது நெஞ்சிற்குள்ளும் தலைவர் கதைத்தது, தளபதிகள் எடுத்து ரைத்தது, போராளிகள் விடை கொடுத்தது என்று, ஒவ்வொன்றும் வந்துபோனது.

அணிகள் நகர்ந்து அகிலன் வெட்டைக்கரையை (சிறு நீரேரி) வந்தபோது நேரம் நள்ளிரவைத் தாண்டிக்கொண்டிருந்தது. அகிலன் வெட்டையில் பரந்து நின்றிருந்த நீர் காற்றுவீசும் நேரம் தவிர மீதியெல்லாம் அமைதியாய் இருந்தது. ஆட்டிலறிகள் ஏவப்படுகின்ற சத்தம் அவர்களிற்குள் ஒரு வேகமேற்படுத்தியது. மெல்ல மெல்ல ஒவ்வொருவராக நடந்தார்கள். ஆழம் அதிகமான இடங்களில் சத்தியாவும், ஆந்திராவும் தாண்டு மீண்டார்கள். இரண்டு பேருமே உருவத்தில் மிகச் சிறியவர்கள். அவர்களின் இந்த சிறிய தோற்றம் பலதடவைகளில் அவர்களிற்கு இலக்கு கிடைக்காது போவதற்கு காரணமாய் இருந்தது. என்றாலும், இம்முறை அவர்களிற்கு அந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. மலர்விழி தன் தலைமையிலேயே இவ்விருவரையும் அழைத்துச் சென்றாள். தண்ணீரின் ஆழம் அதிகமான இடங்களில் நுனிக்காலில் நடந்தும், அதைவிட ஆழம் அதிகமானால் மலர்விழியின் தோள்களில் பிடித்தபடியும் சத்தியா தன் தண்ணீர்க் கடப்பு பயணத்தை தொடர்ந்தாள். ஆந்திராவும் அப்படியே. மற்ற கரும்புலி வீரர்களும் அவர்களிற்கு உதவினார்கள். தண்ணீரும், பாதங்களைப் பிடித்திழுக்கும் சரிகளும் பயணத்தை சிரமமாக்கியது. யாரும் அதைக் கஸ்ரமாக பெரிதுபடுத்தவில்லை. எந்தவிதமான தடையும் ஏற்படாது கரையேறியவர்கள், சற்றுத் தூரம் நடந்து ஒரு மறைப்பான இடத்தில் ஓய்வெடுத்துக்கொண்டார்கள்.

சிலர் தங்கள் துப்பாக்கிகளைத் துப்பரவு செய்தார்கள். சிலர் அப்படியே அந்த புகர்கள் மண்டிக் கிடந்த இடத்திலேயே படுத்திருந்தார்கள், இன்னும் சிலர் தாங்கள் கொண்டுவந்த உலர் உணவுகளை சாப்பிட்டுக் கொண்டும் மற்றவர்களிற்கு அன்பாய் கொடுத்துக் கொண்டுமிருந்தார்கள். அது ஒரு இராணுவ பிரதேசம் என்ற உணர்வு தெரியாது அவர்கள் இயல்பாகவே பேசினார்கள், சிரித்தார்கள். ஆனாலும் இன்டலடித்தார்கள். அந்த இடத்திலேயே மறுநாள் பகற்பொழுது கழிந்தது.

பகற்பொழுதில் தான் அந்த இடமெல்லாம் இராணுவ நடமாட்டம் அதிகமான இடமெனத் தெரிந்தது. இராணுவச் சப்பாத்தின் அடையாளங்கள் ஆங்காங்கே பளிச்சிட்டன. மாலைச் சூரியன் சற்று மரங்களிற்குள் மறையத் தொடங்கினான். இதுவரையும் ஒன்றாக நகர்ந்த அணி இனி இரண்டாகப் பிரிந்து வேறுதிசையில் இன்னொரு இலக்கைத் தேடப்போகிறது. களத்தினுள்ளும் ஓர் உணர்ச்சிபொங்கும் பிரிவு. பளையில் அமைந்திருந்த ஆட்டிலறித் தளம் நோக்கிப் போகின்ற தனுசன், சுதாஜினி அடங்கிய அணியைப் பார்த்து ''உங்களுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு இதவிடக்கூடாது, ஆட்டி தகர்க்க வேணுமெண்டது கனபேற்ற எதிர்பார்ப்பு'' என்றாள் மலர்விழி. கூறிவிட்டு தனது தோள்ப் பையிலிருந்த ''பழரின்'' ஒன்றை எடுத்து வெட்டினாள். ஒரு தாயிற்குரிய பரிவோடும், பாசத்தோடும் ஒவ்வொரு போராளிக்கும் கொடுத்தாள். அந்த கணங்களில் கண்கள் மெல்லக் கசிந்தன. இதே அணிகளில் இனியார் வெற்றிச் செதியோடு திரும்புவார்கள்?

அங்கு தாமதம் என்ற வார்த்தைக்கு இடமில்லை. ஒவ்வொரு மணித்துளியும் ஒவ்வொரு துளி இரத்தமாய் மதிக்கப்பட்டது. தனுசன், சுதாஜினி அடங்கிய குழு பளை நோக்கியும், மலர்விழி, சத்தியா, ஆந்திரா அடங்கிய குழு தாமரைக்குளம் நோக்கியும், பிரிந்து நடந்தனர். இனி கடக்கவேண்டிய மிகப்பெருந்தடை கண்டி வீதி A9 - பிரதானசாலை.

வீதியோரத்தில் முட்கம்பி வேலிகள். அதைக் கடந்தால் ரோந்து வந்துபோகும் இராணுவத்தினர். அதிகளவு ஒளிசிந்தி இரைந்தபடி ஓடித்திரியும் 'றக்'குகள். அத்தனை ஆபத்துக்களையும் கடந்துவிட்டால் இலக்கு தகர்க்கப்படுவது உறுதியாகிவிடும். இந்தக்கணத்திலும் அவர்கள் எடுத்துக் கொண்ட உறுதியை மீண்டும் சொல்லிக்கொண்டனர். ''ஒராள் மிச்சமெண்டாலும் உள்ளுக்குபோய் ஆட்டியை உடைக்கோணும்'' ஒவ்வொருவருமே அதன் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டிய விதத்தையும் நன்கு அறிந்து வைத்திருந்தனர். கண்டி வீதி கடப்பதற்காக அங்குலம் அங்குலமாய் நகர்ந்து, தடைக்கம்பி வெட்டி, மண்ணணை ஏறி ஒவ்வொருவராக சமிக்கை கொடுத்து கிட்ட அழைத்து, அவர்களை நிலையெடுக்கச் செய்து இப்படி ஒவ்வொன்றும் அங்கே நிதானமாக அரங்கேறிகொண்டிருந்தன.

கண்டி வீதியால் கிடுகிடுத்தபடி சைக்கிளில் ரோந்துக்கு இராணுவம் போய்வரும் நடமாட்டம் தெரிந்தது. அடுத்தடுத்து சில இராணுவத்தினர் ரோச்லைட்டுக்களுடன் போவதும் வருவதுமாக இருந்தனர். அவர்கள் போகும் போது சிங்களப் பாடல்களையோ அல்லது வேறு எதனையோ கத்திக்கொண்டே சென்று வந்தார்கள். அவர்கள் கதைக்கும் சிங்களச் சொற்களிற்குள் கலந்துவந்த சில ஆங்கிலச் சொற்கள் அவர்கள் காவல்கடமையை மாற்றுகின்றார்கள் என்று உணரக்கூடியதாக இருந்தது. அதற்குப் பின் எல்லாம் மௌனம்.

பழைய வடிவமைப்பிலான ஒரு கார்போன்ற வாகனம் பளையில் இருந்து முகமாலைப் பக்கமாய் விரைந்தது. அணி வீதிக்கரையை வந்ததும் வேகமாக கடக்க முயன்றார்கள். முன்னேசென்ற ஒருவன் வேகமாக நடந்து கண்டிவீதியை கடந்தான். அடுத்தவன் தனது நிலையிலிருந்து எழுந்தான். கடப்பதற்காக விரைவாக நடந்தான்; — சாவகச்சேரிப் பக்கமிருந்து உறுமலோடு ஏதோ ஒரு வாகனம் வந்தது. அதன் பிரகாசமான வெளிச்சம் அவனை முழுமையாக காட்டியது. கண்ணைப் பறிக்கும் பளிச்சென்ற வெளிச்சம். விரைவாய் திரும்பிவந்த இடத்திற்கு சென்றான. பின்வந்தவர்களை மறைவெடுக்கச் சொன்னான். எல்லாம் ஒருகணத்திற்குள் செய்து முடிந்தது. தண்ணீருக்குள் வந்து கொண்டிருந்தவர்கள் அப்படியே அதற்குள்ளே அமிழ்ந்தார்கள். மரங்களிற்குள், பற்றைகளிற்குள், மண்திட்டுக்களிற்குள் என்று அவசர அவசரமாக தங்களை மறைத்துக் கொண்டார்கள். அது இராவணு 'றக்' வண்டி. அந்தவண்டி நிறைய எறிகணைகளை ஏற்றிச் செல்வது அந்த பெட்டிகள் மூலம் அறியமுடிந்தது. அதைக் கண்டபோது அவர்களிற்கு மெய் சிலிர்த்தது. எங்கோ ஓர் நடவடிக்கைக்கு இராணுவம் தன்னை தயார் செய்கின்றது என்று மனதிற்குள் நினைந்துக் கொண்டார்கள்.

ஆட்டிலறிகளின் அதிர்வு மிக கிட்டவாகவும் எத்தனை என்று அறியக்கூடியதாகவும் இருந்தது. அந்த வாகனத்தின் புகையும், அது கிளப்பிச்சென்ற காற்றும் அடங்குமுன் அணி வேகமாக கடந்தது. கண்டி வீதியைக் கடந்ததும் மனதில் நம்பிக்கை பளிச்சிட்டது; இனி எப்படியும் அந்த இலக்குகள் அழிக்கப்பட்டுவிடும் என்று. தென்னந்தோப்புகள், பற்றைக்காடுகள், வடலிகள் என்று ஒவ்வொரு இடத்தையும் வேகமாகக் கடந்து தளத்திலிருந்து சற்றுத் தூரத்திற்குள் தங்கிக்கொண்டனர். அவர்கள் ஒவ்வொருவரும் சிரித்து, கதைத்து தங்களின் இறுதிநேர ஓய்வையும் உணவையும் பகிர்ந்து கொண்டார்கள். நித்திரை கொள்பவர்களை தட்டியெழுப்பி ''ஏன் இப்ப அவசரப்படுறியள் இனி ஒரேயடியா தூங்கலாம்தானே'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள் சுதாஜினி. வழமையான அவளது குறும்புப் பார்வை சிரிப்பு எல்லாமே அப்பொழுதும் அப்படியே இருந்தன. முகமெல்லாம் முத்து முத்தாக வியர்த்துப்போயிருந்தது. இயல்பாகவே அவளிற்கு முகம், கைகாலெல்லாம் வியர்த்துப்போய் தான் இருக்கும். எப்போதும் சிரிக்காமல் கதைத்து அவளிற்கு பழக்கம் இல்லை; இன்றும் சிரித்தபடியே.

அவளின் உடற்தோற்றத்திற்கு ஏற்றதுபோல அவளிற்கு ('லோ') வழங்கப்பட்டிருந்தது. அது அவளின் மடியில் அவளைப்போலவே அடுத்தகட்ட பூகம்பத்தை நினைத்தபடி மௌனமாய்க் கிடந்தது. ஒவ்வொரு உணவுப் பொதிகளையுமே எடுத்து உண்டபடி தங்களிற்குள் பேசிக்கொண்டிருந்தார்கள். ''எப்படி வெளிநாட்டுச் சாப்பாடு, கதிரை மேசைதான் இல்லை பத்தையெண்டாலும் சந்தோசமான சாப்பாடு'' சொல்லி முடித்து மூச்சு விட்டான் தனுசன். அவர்கள் ஓய்வை முடித்து அங்கிருந்து புறப்படத் தயாரானார்கள். தலைகோதிவிட்டு, கசங்கிய உடுப்பை சரிசெய்து, வியர்த்து உருமாறிய முகங்களை துடைத்து ஏதோ கொண்டாட்டத்திற்கு போவது போல அவர்கள் தயாரானார்கள்.

இலக்கை அண்மிக்க, அண்மிக்க உணர்வின் வேகம் அதிகமானது. சண்டைக்கான தயார் நிலையில் அவர்கள் நகர்ந்தார்கள். கொண்டுபோன தண்ணீர்க் 'கான்'கள் அவர்களைப் போலவே தண்ணீருக்காய் தவித்தது. ஒரு மோட்டை! அந்த பரப்பின் ஓர் மூலையில் கொஞ்சம் தண்ணீர்! அது எப்படி என்னமாதிரியென்று தெரியாது. என்றாலும் அதைக் குடித்தார்கள். பனை மரங்க

( 15ம் பக்கம் பார்க்க )

# ஆனையிறவுத்தள வீழ்ச்சி சிங்களத்தின் அதிர்வலைகள்




நாற்பதாயிரம் துருப்புக்களுடன் உள்ள குடாநாட்டுப் படையின் கண்முன்னால் ஐயாயிரமோ, ஆறாயிரமோ (பத்தாயிரம் என்று வைத்துக் கொண்டாலும்) ஆட்களைக் கொண்ட புலிப் படையிடம் ஆனையிறவைப் பறிகொடுத்தது ஏன்?

அதுவும் புலிகளைவிட பலமடங்கு ஆயுதபலத்தை சிறிலங்கா இராணுவம் கொண்டிருந்தும்– முப்படைகளும் அதற்கு பக்கபலமாக இருந்தும் - புலிகளின் படைநகர்த்தலை தடுக்கமுடியாது போனது ஏன்?

தகர்த்து - நுழைந்த புலிகளை தடுத்து - முறியடிக்கும் திட்டம் இராணுவத்திடம் இருந்திருக்கவில்லையா?

ஆனையிறவுத்தளத்தைப் புலிகள் கைப்பற்றிய செய்தி கொடுத்த அதிர்ச்சிகாரணமாக பேரினவாதப் பத்திரிகைகள் எழுப்பிய கேள்விகள் இவை.

வடக்கில் உள்ள இராணுவம் மோசமான அழிவை எதிர்கொண்டபடியுள்ளது, சிறிலங்காவும் அவ்வாறே ஆபத்திற்குள்ளாகியுள்ளது என 'ஐலண்ட்' ஆங்கில நாளிதழ் (24 4.2000) ஆசிரியர் தலையங்கம் தீட்டி சிங்களத்தின் மன உணர்வை வெளிப்படுத்தியுள்ளது.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு இராணுவப்பாதை திறக்கும் கனவுடன இருந்த சிங்களதேசத்திற்கு அதேபாதையை புலிகள் கைப்பற்றி மாபெரும் இராணுவவெற்றியை பெற்றுக்கொண்டிருக்கும் செய்தி, அவர்களுக்கு அதிர்ச்சியையும் அச்சத்தையும ஊட்டிவருகின்றது.

ஆனையிறவுத்தளம் வீழ்ந்துகொண்டிருந்தபோது சிறிலங்கா அரசாங்கத்தின் ஜனாதிபதி- எதிர்க்கட்சித்தலைவர் உட்பட முக்கிய அரசியல் புள்ளிகள் நாட்டில் இல்லாதது பேரினவாத சக்திகளை கோபமூட்டிவிட்டது.

ரோம் பற்றியெரியும்போது அதை அசண்டைசெய்நபடி நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தாலும், நீரோ மன்னன் ரோமிலேயே இருந்தான். ஆனால், ஆனையிறவு வீழ்ந்தபோது சந்திரிகா அம்மையார் நாட்டில் இல்லை - ஜெனரல் ரத்வத்த நுவரெலியாவில் குளிர்காய்ந்தபடி மௌனமாக மறைந்திருந்தார் என ஐலண்ட் பத்திரிகை அவர்களை காரசாரமாகச் சாடி ஆசிரியர்தலையங்கம் வரைந்துள்ளது.

சிங்களவீரத்திற்கு அவமானத்தைத் தேடித்தந்த மோசமான இராணுவத் தோல்வியை ஒரு சிறிய பின்னடைவு, என்றும தந்திரோபாயப் பின்வாங்கல் என்றும் பாதுகாப்பு முன்னரங்கங்களை மாற்றி அமைத்தல் என்றும் வார்த்தை ஜாலம் மூலம் மழுப்ப முயன்ற சிங்களஇராணுவத்தளபதி சிறிலால் வீரசூரியாவை சிங்களத் தொடர்பூடகங்கள் விமர்சித்துள்ளன.

ஆயுதபலத்தில் புலிகள் பலமடைந்துவிட்டனர். அவர்களிடம் 60 எம். எம், 81 எம். எம், 1:0 எம். எம் மற்றும் பல்குழல் மோட்டார்கள் என ஆயுதங்கள் உண்டு என்ற இராணுவத்தளபதியின் விளக்கத்திற்கு இந்த ஆயுதங்கள் இராணுவத்திடம் இல்லையா என எதிர்க்கேள்வி எழுப்பி இராணுவத்தளபதியை சங்கடத்திற்குள்ளாக்கியுள்ளன.

இதேசமயம், இது ஒரு தற்காலிகப்பின்னடைவு. புலிகளை நசுக்கும்வரை போர்தொடரும் என்ற அம்மையாரின் கருத்தை ஆமோதித்து அதற்கென பல ஆசிரியர் தலையங்கங்களை சிங்களத்தின் பத்திரிகைகள் எழுதி சிங்களவர்களை சமாதானப்படுத்த முயல்கின்றது.

ஆனையிறவுத்தளத்தைப் பாதுகாக்க முப்படைத்தளபதிகளையும் குடாநாடு சென்று சமரை நேரடியாக நெறிப்படுத்தும்படி சந்திரிகா அம்மையார் பணித்திருந்தார். இருபது நாட்கள பலாலியில் தரித்துநின்று படைநடாத்தியும் அவர்களால் ஆனையிறவை தக்கவைக்க முடியவில்லை.

தோல்விக்கான காரணங்களை விளக்க கொழும்பில பத்திரிகையாளர்களை அழைத்து இராணுவத்தளபதி மாநாடு நடாத்தியபோது ஒரு பததிரிகையாளர் கேட்டார் இராணுவத்தளபதியாக நீர் பதவிவகுத்தபோது வன்னியில் இராணுவம் தோல்வியைச் சந்தித்தது. இப்போது ஆனையிறவில். எனவே பதவியைத் துறந்துவிட்டு வீட்டிற்குப் போகவேணும் என்று தோனறவில்லையா? என வினாவினார்.

பதவிவிலகலால் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாது என இரட்டை அர்த்தத்தில் இராணுவத்தளபதி பதில் கூறினார்.

குடாநாட்டைக் கைப்பற்றிய றிவிரசவின் களநாயகர்களாக வர்ணிக்கப்பட்டவர்களில் ஜானக பெரேராவும் - சரத் பொன்சேகராவும் அடங்குவர். ஆனையிறவு வீழ்ச்சியைத் தடுக்க இந்த இரு தளபதிகளும் பலாலிக்கு அனுப்பப்பட்டனர். அந்த வெற்றிநாயகர்களின் கண் முன்னால் ஆனையிறவு பறிபோனது நல்லதொரு வரலாற்றுச்சுவை.

ஓயாத அலைகள் மூன்றின் ஆரம்பத்தில் வன்னியில் உத்தரவில்லாமல் பின்வாங்கி ஓடியதற்காக இரண்டு மேஜர் ஜெனரல்கள், ஒரு பிரிகேடியர், ஒரு கேணல், மூன்று மேஜர்கள் கட்டாய விடுப்பில் வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். ஆனையிறவில் உத்தரவுப்படி பின்வாங்கியோடல் நடந்தது. இரண்டு களத்திலும் பின்வாங்கி ஓடல் என்பது பொதுவான இராணுவ அம்சமாக இருந்தது. அது உத்தரவுபெற்றா! பெறாமலா! என்பதே சிங்களப்படைகள் சந்தித்துள்ள இன்றைய களயதார்த்தமாகும்.

சந்திரிகா அரசாங்கம் பதவியேற்ற பின்னர் அது ஈட்டிய இராணுவ வெற்றி குடாநாடு கைப்பற்றப்பட்டதேயாகும். அதன்பின் முல்லைத்திவு - பூனகரி- வன்னி- ஆனையிறவு - என அடுத்தடுத்து பாரிய இராணுவத் தோல்விகளை அம்மையாரின் அரசாங்கம் அனுபவித்து வருகின்றது என சிங்கள ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர். பெரிதாக பிரச்சாரப்படுத்தப்பட்ட குடாநாட்டு வெற்றியும் இப்போது புஸ்வாணமாகிவருகின்றது என அவர்கள் அழுதுபுலம்புகின்றனர்.

சிங்களப்படைக்கு என்ன நடந்துவிட்டது! என சிங்களதேசமே அச்சத்துடன் அங்கலாய்க்கின்றது. அரசியல், இராணுவத் தலைமைகள் செயலிழந்துவிட்டன என ஒரு சாராரும், படைத் தலைமையிடம் சரியான போர்த்திட்டம் இல்லை என வேறொருசாராரும் தீர்ப்புக் கூறுகின்றனர்.

ஆனால், 'ஐலண்ட்' நாளிதழில் வாராவாரம் தவறாமல் பேரினவாத வெறியைக் கக்கிவரும் நளின் - டி - சில்வா என்ற இனவாதச் சிந்தனையாளர் வேறொரு தீர்ப்பை வழங்குகின்றார்.

ஆயுதங்களுடன் மட்டும் ஒரு இராணும் போர்புரிய முடியாது. அதற்கு ஒரு அரசியல் சித்தாந்தமும் இருக்கவேண்டும் (26.4.2000) என திருவாய்மலர்ந்துள்ளார். பொருள் பொதிந்த இந்த அரசியல் வசனம் இந்தப் பச்சைப் பேரினவாதியின் சொந்த வசனம் அல்ல. உலக வரலாற்றாய்வாளர்கள் ஏற்றுக்கொண்ட பொதுவான வரலாற்றுத்தீர்ப்பு இது. ஏற்கனவே, சிங்கள - பௌத்த பேரினவாத அரசியல் என்ற சித்தாந்தத்தை சிங்களப்படைகள் கொண்டுள்ளன. ஆனால், சிங்களப்படைக்கு அப்படி ஒரு அரசியல் சித்தாந்தம் இல்லை என்றும் அது மனிதாபிமான கருத்துக்களாலேயே பாதிக்கப்பட்டு போர்புரிய முடியாது திணறுகின்றது என்றும் இந்த இனவாதச் சிந்தனையாளர் நிறுவமுயல்கின்றார்.

ஆனையிறவு வீழ்ச்சியுடன் சிங்கள உறுமய என்ற பேரினவாத அரசியல் கட்சி முளைத்தெழுந்துள்ளது. சிங்களத்தின் பிரதான கட்சிகள் இரண்டும் போரைச் சரியாக நடாத்தவில்லை- சிங்களவரின் உரிமைகளை நிலைநாட்டவில்லை என இந்தப் புதியகட்சி குற்றம் சாட்டியுள்ளது. தமது கட்சி சிங்களவரின் விடுதலைப் போராட்டத்தை நடாத்தப் போகின்றது என தனது கொள்கைப் பிரகடனத்தை கட்சித்தலைமை பிரகடனப் படுத்தியுள்ளது. ஆளும்கட்சி - எதிர்க் கட்சிப் பாராளு மன்ற உறுப்பினர்கள் சிலர் இப்புதிய கட்சியில இடம்பெற்றுள்ளனர். முக்கியமான சில சிங்களப் பிரபல்யங்களும் இதில் இணைந்துள்ளன. உலகப் புகழ்பெற்று விட்ட சிங்களக் கிரிக்கெட் வீரர் அர்ச்சுனாரணதுங்க இதில் முக்கியமானவர். ஆனையிறவில் காயம்பட்டு - கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிப்பாய்களுக்கு வரிசையில் நின்று இரத்தம் வழங்கி, இவர் தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்துள்ளார். இப்புதிய கட்சியின் தோற்றத்திற்கும் - அதன் கொள்கை நிலைப்பாட்டிற்கும் சிங்கள - ஆங்கிலப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரச்சாரப்படுத்தியுள்ளன.

பௌத்தபிக்குகள் - அரசியல்வாதிகள் - புத்திஜீவிகள் - தொடர்பூடகவியலாளர்கள் என பன்முகப்பட்ட பேரினவாதப் பட்டாளத்தில் விளையாட்டு வீரர்களும் இணையத் தொடங்கியுள்ளனர். சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் வளர்ச்சியை இது புலப்படுத்துகின்றது. தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கு சமாதானவழியில் தீர்வுதேடவேண்டும் என்ற சர்வதேசத்தின் நம்பிக்கையை நடைமுறைச்சாத்தியமானவிடயம் என்று அது எப்படி நம்புகின்றது என்பது புதிரானதொன்றுதான்.

இதேவேளை வியட்னாமின் தியன்-பியன்-பூவில் பிரான்சியப்படைகள் சந்தித்த இராணுவத்தோல்விக்கு நிகராக ஆனையிறவுத் தோல்வியை தயான் ஜயதிலக என்ற அரசியல் ஆய்வாளர் ஒப்பிட்டுள்ளார்.

தியன்-பியன் - பூ தோல்வி பிரான்சியப் படைக்கு பாரிய ஆள்-ஆயுததளபாட இழப்பை ஏற்படுத்தின. அத்துடன் பிரான்சின் இராணுவ மானம் கப்பலேற்றப்பட்டது. வியட்னாம் மீதான அதன் ஆக்கிரமிப்பு ஆசைக்கும் அது முடிவுகட்டியது. அத்துடன் வியட்னாம் விடுலைப் போராட்டத்திற்கு சர்வதேச பிரபல்யத்தையும் தேடிக்கொடுத்தது. ஜியாப் என்ற இராணுவமேதையின் புகழும் உலகஅரங்கில் பேசப்பட தியன்-பியன்-பூ காரணமானது.

சிங்களப்படை ஆனையிறவுநிலத்தில் சந்தித்த தோல்வியும் இவ்வாறான அரசியல் - இராணுவ பரப்புரை விளைவுகளை உண்டு பண்ணியுள்ளன என அந்த ஆய்வாளர் சொல்லாமல் சொல்லியுள்ளார். புலிகள் இயக்கத்தின் இராணுவவளர்ச்சியை உலக தொடர்பூடகங்கள் பாரபட்சமின்றி புகழ்ந்துரைக்கின்றன. தலைவர் பிரபாகரனின் மதிநுட்பமிக்க இராணுவச் செயற்பாடுகளை அவை பாராட்டவும்- வியந்து போற்றவும் செய்கின்றன.

( 02ம் பக்கம் பார்க்க )




வடபுலப் போரரங்கில் புலிப்படை நிகழ்த்திய இராணுவ சாதனைகளை 'ஐலண்ட்' பத்திரிகை இவ்விதம் (இரண்டு காட்டூண்கள்) வெளிப்படுத்தியுள்ளது.

## விடுதலைக்கான---

இருக்கும் அபாயத்தை ஈராக் சிக்கல், கொசோவோச் சிக்கல் எமக்கு உணர்த்துகின்றன. வலுவான விடுதலையமைப்பின்மையே இத்தகைய நிலமைகளுக்கு பிரதான காரணம். மிக வேறுபாடான இத்தகைய சருவதேசச்சூழலில் மிக மாறுபாடாக நடக்கும் தலைவரின் அரசியல் மதிநுட்பம் இங்கே கவனிக்கத்தக்கது. இங்கே பிறப்பதுதான் புத்தம் புதிய விடுதலைப்பாதை.

இவ்வுண்மைகள் பற்றி எதிரித்தரப்பே என்ன சொல்கிறது? சிங்கள இனத்தாரின் திடீர் பாதுகாவலனாகிவிட்ட தயான் செயத்திலக்க எழுதுகிறார். '' இங்கே நாம் அவதானிக்க வேண்டிய மிகப் பிரதான மாற்றம், அடிப்படையில் தரமாற்றமொன்று நிகழ்ந்துவிட்டது என்பதே. மிகப் பிரதான செய்தி என்னவென்றால் வன்னி வெற்றிகளை தொடர்ந்து பிரபாகரன் விடுதலைக்கான கரந்துறைப் போர்முறையான 2ம் கட்டத்தை கடந்து மூன்றாவதும் இறுதியுமான கட்டத்துள் நுழைந்துவிட்டார் என்பதே. இப்போது வடக்கில் நடப்பது தனிச்சமரொன்றல்ல. இதுவொரு பெரும் தொடரான தீர்க்கமான இராணுவ நடவடிக்கை. பல மாதங்களுக்கு நீடிக்கவல்லது. இறுதி வெற்றியை எட்ட பிரபாகரன் நடத்தும் போரிது. ஆனையிறவு வீழ்ந்த பின் இராணுவத்தின் முதுகெலும்பு முறிந்துவிடும். அதன்பின் ஒஸ்லோவில் நடக்கும் பேச்சுவார்த்தை என்பது எல்லாவற்றையும் கைவிட்டு வெளியேறுவது பற்றியதாகவேயிருக்கும். '' (ஆனையிறவு வீழ்ச்சிக்கு முன்னர் எழுதப்பட்ட இக்கட்டுரை, 16/04 வீக்கெண்ட் எக்ஸ்பிரஸில் வெளிவந்தது). சண்டே ரைம்ஸ் தனது 2/4 தலையங்கத்தில் எழுதுகின்றது '' நாங்கள் இவ்வாறு சொல்வது தவறாகாது. புலிகளோடான போர் என்பது மூர்க்கத்தனமான சக்தி ஒன்றோடு நடக்கும் போரல்ல. அது கற்பனை, புத்தாற்றல் நிரம்பிய மனமொன்றின் போர். எண்ணங்களின் போர். ''

O

## கருவேங்கைகள்

ளோடு ஒட்டி வளர்ந்திருக்கும் சிறுபற்றைகளும், மணற்பிரதேசத்தில் முளைத்த புற்களையும் கவசமாக்கி அங்குலம் அங்குலமாய் நகர்ந்தார்கள். அவர்களின் கண்களிற்குள் அந்த தளத்தின் பிரமாண்டமான உருவம் தெரிந்தது.

மண்ணணை, இடையிடையே காவலரண், முட்கம்பித் தடை என்று அதன் பலத்தை உறுதி செய்யும் ஏற்பாடுகளும் அவர்கள் முன் விரிந்துகிடந்தது. எதிரி ஒரே நேரத்தில் அடுத்தடுத்து எட்டு ஆட்டிலறிகளை இயக்குவது தெரிந்தது. அது இயக்குவதற்காகவும் வேறுபக்கம் திருப்புவதற்காகவும் அவன் கொடுக்கும் கட்டளைகள் காது மடல்களில் அறைந்தன. அந்த எறிகணைகள் பெரும் சத்தத்தோடு சுவாலை கிளப்பி வெடிக்கின்றபோது அதன்சுவாலை அவர்களின் வியர்வையை உலர்த்துவதாய் முகத்தில் சுட்டது. அவை இன்னும்சில விநாடிகளிற்குள் நொருங்கப் போகிறது என்று எண்ணியபோது ஒவ்வொருவரது பற்களும் ஒன்றோடு ஒன்று உரசிக்கொண்டன.

பனை புகையிரத நிலைய கட்டிடத்தின் கூரை இல்லாத தோற்றம் முகம் இழந்த ஒருவனைப் போலிருந்தது அந்த இருளையும் ஊடுருவி அவன் அமைத்திருந்த தடைகளிற்கு வெடிமருந்துகளைப் பொருத்திவிட்டு அணிகளுக்கு தாக்குதலை ஆரம்பிக்கும் சமிக்கையை கொடுக்கவென நினைத்தபோது இறந்த காவலரண் ஒன்றிலிருந்து இராணுவச் சிப்பாய் ஒருவன் வெளியே வந்தான். அவன் கைகளில் துப்பாக்கி இல்லை. பிரகாசமான ரோச்லைட் ஒன்றை வைத்து எல்லா இடமும் சுற்றியடித்தான். அவனின் பருத்த உருவமும் முரட்டுத்தனமான தோற்றமும் தெளிவாக வான விளிம்பில் தெரிந்தது. முன்னே சென்றவர்களின் முகத்திற்கு நேரே அவன் ஒளிபாச்சியபோது திடுக்குற்று 'சவ்த' என்றான் நடுக்கத்துடன். கரும்புலி வீரர்கள் மனசிற்குள் சிரிப்போடும் கூடிய நிதானத்தோடும் நிலையாக நின்றார்கள். மறுமுறையும் தனது ஒளியை வேறுதிசை ஒன்றில் பாச்சியும் சத்தமாய் 'சவ்த' என்றான். நிதானம் ... சிரிப்பு. மூன்றாம்முறை முகத்திற்கு நேரே ஒளிபாச்சி அதட்டலாக 'சவ்த' என்றதுதான் தெரியும்; அந்த சிப்பாய் அதிலேயே செத்துக்கிடந்தான்.

அணி மிக வேகமாக உள்நுழைந்தது. ''ஓடுங்கோ ... வேகமாக முன்னேறுங்கோ'' என்ற சத்தத்தோடு எல்லோரும் மண்ணணை ஏறி உள்நுழைந்தார்கள். காவலரணில் இருந்து சூடுகள் வந்துகொண்டே இருந்தன. ''நான் 'லோ' அடிக்கிறன் முன்னேறுங்கோ '' என்று சுதாஜினி கத்தியது சத்தங்களிற்குள் அடக்கமாய் கேட்டது. அடுத்து என்ன நடந்தது என்று நிதானிப்பதற்குள் வெடியோசைகள் — சுதாஜினி நின்ற இடமே தெரியவில்லை. நிச்சயமாக எதிரியின் குறி அவளாகத்தான் இருந்திருக்கும்.

சுதாஜினியின் வெடியதிர்வைப் போலவே ஒவ்வொருவரும் வேகமாக இலக்குகளை நெருங்கினார்கள். ஆட்டிலறிகள், அதற்கான எறிகணைக் களஞ்சியங்கள் எல்லாம் தெளிவாகத் தெரிந்தன. நிலவு வருவதற்கு முன்னதாக வானம் வெளுத்திருந்தது. அந்த மங்கிய வெளிச்சத்தில் அந்த ஆட்டிலறிகளின் உருவங்கள் கருமையாகத் தெரிந்தன. மிகவேகமான தாக்குதலில் அந்த பெரியதளமும் அத்தனை ஆட்டிலறிகளும் பூரண கட்டுப்பாட்டிற்குள் வந்தன. ஆயுதக் களஞ்சியங்கள் ஆங்காங்கே பெரும் சத்தமுடன் வெடித்து சின்னச்சின்ன எரிமலையாய் எரிந்துகொண்டிருந்தன.

நிலைமைகள் வெளியில் அறிவிக்கப்பட்டது. உதவிக்குச் செல்லவென இருந்த அணி அங்கே குறித்த நேரத்திற்குள் போய்ச் சேருமா என்பதில் சந்தேகம் எழுந்தது. கரும்புலி வீரர்களிற்கு செம்பியன்பற்று கடலில் சண்டை நடக்கும் சத்தங்களை தெளிவாகக் கேட்க முடிந்தது. உதவியணி இனி வந்து சேராது என்ற முடிவிற்கு வந்தாலும் இயன்றளவு அத்தனை ஆட்டிலறிகளையும் பாதுகாத்தவர். தனுசன் எல்லா ஆட்டிலறிகளுக்கும் ஓடி ஓடி வெடிமருந்துப் பொதிகளை கட்டி வெடிக்கக்கூடிய நிலைக்கு கொண்டு வந்துகொண்டிருந்தான். வேறு வேறு முகாம்களில் இருந்து அந்த தளத்தை இலக்குவைத்து எறிகணைகளை எதிரி ஏவிக் கொண்டிருந்தான். தனுசன் தன் பணிகளை நிறைவேற்றி முடித்தபோது அவனிற்கு அருகோடு எறிகணை ஒன்று வீழ்ந்து வெடித்தது. அதற்குப் பின் தனுசனின் தொடர்பு இல்லை. பொழுது வெழுக்கத் தொடங்கியது.

அத்தனை ஆட்டிலறிகளையும் தகர்த்து விட்டு பின்வாங்கும்படி கட்டளை கிடைத்தது. ஆட்டிலறிகளையும் ஆயுதக் களஞ்சியங்களையும் தகர்த்துவிட்டு வெற்றியோடு பின்வாங்கினார்கள். அவர்கள் ஒவ்வொருவரது மனதிற்குள்ளும் அவர்களோடு வந்து பிரிந்துசென்ற மலர்விழியின் அணியும் நிச்சயம் தனது இலக்குகளை அழித்திருக்கும் என்ற நம்பிக்கை நிறைந்திருந்தது. அறிய ஆவலாயும் இருந்தது.

அவர்களோடு வந்தவர்களில் இரண்டு தோழர்கள் இல்லை. ஆனால் அவர்களின் இலக்கை வெற்றிகொண்டுவிட்டார்கள். தீர்மானித்ததன்படி வந்த வழியிலே கண்டி வீதியில் நிலைகொண்ட எமது அணிகளோடு கைகுலுக்கிய போது சொன்னான் ஒரு கரும்புலி வீரன் '' எத்தனைபேர் எத்தனை இரவுகளாய் தேடி அலைந்த ஆட்டிலறிகள்— அத்தனை பேற்றை கனவையும் நிறைவேற்றிப் போட்டோம்.'' சமரிற்கு அடித்தளமிட்டுவிட்ட நிறைவு அவர்களிடம் இருந்தது.

அவர்கள் அறிய ஆவலாய் இருந்த மற்றைய மலர்விழியின் அணி தனக்குத் தரப்பட்ட நான்கு ஆட்டிலறிகள் கொண்ட மற்றைய தளத்தை அழித்துவிட்டது. ஆனால் அந்த கரும்புலி வீரர்களில் மலர்விழியும், ஆத்திராவும், சத்தியாவும் திரும்பவில்லை. O

## ஆனையிறவு

பார்த்திருப்பர். தவறி உயிரைவிட்டவர்கள் இறுதிக் கணத்தில் எம்மக்கள் அன்று எப்படி மரணித்தார்கள் என்பதை உணர்ந்துவிட்டு மடிந்திருப்பர். எதிரி படிக்க விரும்பாத பாடத்தை புலிவீரரிடம் இப்போது படித்துத் தெளிந்திருப்பர்.

நண்பகலோடு எதிரியின் தப்பியோட்டம் நிறைவுபெற்றது. ஓடியவர்கள் இனி எம் தேசம்தேடி கால்மிதிக்கத் துணியமாட்டார்கள். துணிந்தால் அவர்கள் மீளமாட்டார்கள். புலிவீரம் இச்சமரில் பகைக்களித்த போதனை இதுதான். வரலாற்றின் முக்கியத்துவம் மிக்க ஆனையிறவுத்தளம் புலிகளின் வசமாயிற்று.

23ம் திகதி காலை 9.52ற்கு 'வென்று வாழ்வதே தமிழன் தனக்கெழுதிய விதி' என்பதன் சாட்சியமாய் ஆனையிறவிலும் புலிக்கொடி ஏறியது. இந்தப் பெரும் சமரின் ஒருங்கிணைப்புக் கட்டளைத் தளபதி கேணல் பானு சமர்முனைத் தளபதிகள், போராளிகள் புடைசூழ தமிழீழ தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். அந்த உப்புவெளியில் உயர்ந்து நின்ற புலிக்கொடி தமிழரின் தனித்துவ அடையாளத்தின் கம்பீரமாக காற்றில் பறந்துகொண்டிருந்தது.

வன்னியில் மக்களின் வெற்றிக்களிப்பு உணர்வுகளின் உச்சத்தைத் தொட்டது. யாழ்மக்கள் உச்சிகுளிர்ந்து மௌனத்தில் மகிழ்ந்தனர். உலகத் தமிழர் பெருவிழா எடுத்தனர். அண்டைத் தமிழகமும் வெற்றிக்கு விழா எடுத்தது. களம்வந்து எம்மக்கள் உணவு தந்தனர். அந்தக் களிப்பின் உச்சம் பெரியது.

தொடர்ந்த நாட்களில் புலிகள் வடதிசை நோக்கி முன்னேறினர். இத்தாவில் கண்டி வீதியில் நிலைகொண்டுள்ள எமது படைத்தொகுதிகளுடன் கைகுலுக்குவதே இச்சமரின் முற்றுப்புள்ளி. வடதிசை நோக்கிய முன்னேற்றத்தில முகமாலையில் எதிரித் தளத்தை வெற்றிகொண்டு பளைப் பிரதேசத்தை அண்மித்தபோது எதிரி பளை நகரைத் தற்காப்பதற்காக அடுத்தகட்ட பாதுகாப்பு வியூகத்தை ஏற்படுத்தியிருந்தான்.

பளை நகரை வெற்றிகொள்வதற்கான தயார்ப்படுத்தலின் பின் 25ம் திகதி மேற்கொண்ட ஒருமுயற்சி எமக்கு குறித்த வெற்றியை அளிக்கவில்லை. எதிரி அதனைத் தக்கவைப்பதில் உறுதியாக இருந்தான். எதிரியின் உயர் கட்டளைப்பீடம் அதனைத் தக்க வைப்பதற்கான கண்டிப்பான கட்டளையை வழங்கியிருந்தது. மீண்டும் 27ம் திகதி காலை 7.00 மணிக்கு எமது சிறப்பணிகள் பளை நகரை மீட்டுக்கொள்வதற்கான தாக்குலைத் தொடங்கின. எதிரிக் காவலரண்களைத் தகர்த்து உள்நுழைந்தது அவ்வணி. மேஜர் வீரமணியின் தலைமையில் 4.1 படையணி, சோதியா படையணி, நிதித்துறைத் தாக்குதலணி, எல்லைப்படை சிறப்புத் தாக்குதலணி ஆகியவற்றைக்கொண்ட படைத்தொகுதி கண்டி வீதியால் முன்னேறியது. இதன் உதவி நகர்வாக லெப். கேணல் சேகரின் தலைமையில் ஒரு படைத்தொகுதி கண்டி வீதிக்கும் நீரேரிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் முன்னேறியது.

வீதியின் குறுக்காக அமைந்திருந்த எதிரியின் பிரதான தளம் எம்மால் வெற்றிகொள்ளப்பட்டபோது எதிரி பின்வாங்கத் தொடங்கினான். பரந்திருந்த படைத்தளங்கள் தாக்கப்பட்டபோது நிலைதடுமாறி பின்வாங்கத் தொடங்கிய எதிரியை விரைந்த தாக்குதலுக்குட்படுத்தினர் புலிகள். வேகப்பின்தொடர்வு நடவடிக்கை மூலம் எதிரிக்கு மீளொழுங்குபடுத்துவதற்கான அவகாசத்தை வழங்காது புலிகள் முன்னேறிச் சென்றனர். எதிரியின் மிகக் கடுமையான முறியடிப்பு முயற்சி நீண்ட சண்டையின் பின் தோற்கடிக்கப்பட்டதும், டாங்கிகளை வரவழைத்து அதுவும் பயனற்றுப் போனதும் எதிரிச் சிப்பாய்களுக்கு ஏமாற்றத்தைத் தந்தது. 12 மணிநேரம் இடைவிடாது தொடர்ந்த அன்றைய சண்டையின் இறுதியில் இத்தாவிலை அடைந்த எமதணிகள் அங்கிருந்த எமதணிகளோடு ஒன்றிணைந்துகொண்டன. புலியணி முன்னேறிய கண்டிவீதிப் பாதையெங்கும் பரந்துகிடந்தன எதிரியின் உடல்கள். நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் இதில் கொல்லப்பட்டதுடன் பெரும் தொகையான இராணுவத்தினர் காயமடைந்தனர். இரு சமர்முனைகளின் இணைவும இச்சமரின் முற்றுப்புள்ளியை முரசொலித்தது, அன்றைய இருட்பொழுதில்.

தரையிறங்கிய படைத்தொகுதிகளுக்கு தலைமைதாங்கிய தளபதி கேணல் பால்ராஜ்சும், ஆனையிறவு சமர்முனைக்குத் தலைமை தாங்கிய தளபதி கேணல் தீபனும், சமர்முனைகளை ஒருங்கிணைத்து கட்டளை வழங்கிய தளபதி கேணல் பானுவும் இத்தாவில் கண்டி வீதியில் ஒன்றிணைந்து கைகுலுக்கிக்கொண்டவர். அன்றைய நாள் ஏப்ரல் 28 காலைப்பொழுது.

யாழ் ஆக்கிரமிப்பு வெற்றியை பட்டுத்துணியில் எழுதி தங்கத் தாம்பாளத்தில் வைத்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த ஆட்சியாளர்கள், வெற்றிக்கு வீர விருதுகொடுத்து விழா நடத்திய சிங்கள தேசம், ஓயாத அலைகள் - 03 என ஓங்கியெழுந்த புலிகள்சேனை கண்டு உலக நாடெங்கும் உதவிகேட்டுப் பறந்தது. எம் தேச புதல்வர்களின் துயிலுமில்லங்களின் கல்லறைகளைக் கிளறி, அவர்களின் ஆன்ம அமைதியைச் சிதைத்த அநாகரிகவாதிகளின் சேனை, ஆசியாவில் சென்ற நூற்றாண்டில் அதிபெரிய புதைகுழியை செம்மணியில் உருவாக்கிய பெருமைமிகு சிங்களத்தின் சேனை, மனிதாபிமான உதவியேனும் கேட்டு அண்டை நாடுகளை நாடியது. ஆயினும் இது முடிவல்ல. எம் எல்லைகளை முட்டி புலிக்கொடி பறக்கும்வரை புலிகள்சேனை நகரும். புலிக்கொடி தொடரும் தன் பறப்பிற்காக. O

# அழுத வாழ்வு முடிந்ததென எழுதவருகிறது காற்று

பிரபஞ்சத்தின் மொத்த அழகையும்
எம் முற்றத்தில் பரவி வைத்திருந்தோம்.
சாளரங்கள் திறந்து எம் வாசலெங்கும்
சோபனங்கள் விதைத்திருந்தோம்.
சந்தோஷப் பொடியைச் சந்தனமாக்கி
எங்கள் தாழ்வாரத்தில் தடவியிருந்தோம்.
குச்சொழுங்கையெல்லாம் குதுகலிக்க
காலைக்கும், மாலைக்கும் காற்கொலுசு பூட்டியிருந்தோம்.
தெருவெங்கும் தில்லானா
வயலெங்கும் ஜலதரங்கம்.
தன்னழகில் தானே லயித்துப்போய்
எம் வாசற்பூக்கள் எத்தனை வடிவாயிருந்தன.
ஊரையடித்து உலையிற் போடவென
வந்தாய் நீ.
குருதிவடியும் கடவாயோடு
எம் தெருவில் இறங்கினாய்.
காற்றில் விஷப்பொடி தூவி மூக்கில் நுழைந்தாய்.
பூக்களின் மீது அமிலதாரை பூசினாய்.
முற்றமெங்கும் முள்ளாய்ப் பரவினாய்.
ஓநாய் என வந்து கதறக் கதற
எம் உறவுகளைப் பிடித்தேகி
ஆட்காட்டியின் அவலக்குரலிடையே
செம்மணியில் புதைத்தாய்.
முகைவெடியா மொட்டுக்களைக்கூட
பிடுங்கியெடுத்துப் பிச்செறிந்தாய்.
பூசையிற் கூடப் புகுந்து
வாசலில் வந்தென்னை வணங்கென்றாய்.
தெருநடுவே தாயின் துகிலுரிந்து
கற்றைக் குழல் திருகிக் கதறவைத்தாய்.
நெற்றித் திலகமதை நீயழித்தாய்.
ஆறுமணியுடன் அடங்கிப் போவென
எம் தெருவில் நின்று எமக்கே ஆணையிட்டாய்.
விதியேறி நீவரும் வேளையில் . _ —
சிரிப்பாய்
நாங்களும் சிரிக்க வேண்டும்.
கதைப்பாய்
நாங்களும் கதைக்க வேண்டும்.
தினமும் உள்ளெரிந்தபடி

## உலைக்களம்

- வியாசன் -

உன் " சென்றி " கடப்போம்
உடல் தொட்டுச் சோதிப்பாய்.
அழுதபடி நெளிவதன்றி வேறென்ன இயலும்?
தினமும் துச்சாதனர் துகிலுரிய
வெந்து போனோம்.
சந்தோஷம் தொலைந்து ஐந்து வருடங்கள்.
கணக்கெழுதிக் கணக்கெழுதிக் காத்திருந்தோம்.
கொப்பளித்த கோபத்தின் குறிப்பெழுதி
தீயிற் குளித்திருந்தது எம்தேசம்.
உன்னைப் பார்த்துப் புன்னகைத்தோம்.
உண்மைதான்
அது சிரிப்பல்ல தீயின் மூச்சு.
உன்னைப் பார்த்துக் கையசைத்தோம்.
மறுக்கவில்லை
அது நட்பல்ல கோபத்தின் குறியீடு.
வன்னிவாசல் திறக்கும்வரை
நாங்களெடுத்த தவமிது.
உயிர்வாழ நாம்தரித்த கவசம்.
தோளிற் சுமந்த பாரச் சிலுவை.

பிள்ளைகள் வரும்வரை
புனைந்திருந்த ஒப்பனை.
ஒப்பனையை உண்மையென நம்பி
நீதான் தப்புக்கணக்கிட்டாய்.
உள்ளிருந்த கவசத்தை உற்றுப்பாராது
வெளியிருந்த உத்தரியத்தின் அழகில்
உன் முடிதரித்ததலை தவறிழைத்தது.
இன்று அகழிகள் நிரவிப் பாலமிட்டு
காலம் கதவுகளைத் திறந்தது.
ஆயிரம் கரங்கள் எடுத்தடித்து
மூசி மூசி முன்னேறுகிறது ஓயாத அலை.
அணையுடைத்து உள்ளே நுழைந்து
இழந்தவை மீட்டு இரைகிறது கடல்.
இன்றும் கடலேயெமக்குக் கைகொடுக்கிறது.
கடல்தாயே! உன்னைக் கைதொழுதோம்.
தேவமகனே உன்னைத் தோத்தரித்தோம்.
மீட்பது நிலமாயினும்
உன்மடியேறியே முன்னேறுகின்றோம்.
உள்ளங்கையில் வைத்து ஊதித்தள்ள
உமித்துகளல்லத் தமிழர்.
பெருக்கெடுத்த நதியின் பிரவாகம்.
வீரியமிக்க விடிகாலைப் பொழுதில்
தேருருண்டு வருகிறது.
ஊரெல்லை மீறி உள்ளேவரும் ரதங்களின்
சாரதி ஆசனங்களில் தளபதிகள்.
திவ்ய அஸ்த்திரங்களுடன் மகாரதர்கள்.
அருகாக அணிவகுத்துளது அதிரதர் சேனை.
சக்கர வியூகம் அமைத்துள்ளான் தலைவன்.
நீ வியூகம் கிழித்து வெளியேறாதவாறு
தர்மம் தலைவாசலில் காவலிருக்கிறது.
கொற்றத்தேவி!
கொலுவிருந்தது போதுமடி.
உன் காலின் சிலம்பு கலீர் கலீரென
கோடிவிழிதிறந்து கூத்திடடி.
வென்றனர் பிள்ளைகள்.
பூட்டிய இரும்புக் கதவுகள் உடைந்து
வாசல் திறந்தது.
எம் மானத்துக்குரித்தான மகுடத்தை
ஆனையிறவில் எடுத்துத்தரித்தோம்.
முன்னர் ஆனையிறவென்றாலே அச்சம்.
பஸ்ஸில் வரும்போது ஒருபயம்.
தமிழரின் குருதியால் வர்ணம்பூசப்பட்டது
அந்த வதைமுகாம்.
தமிழர் தமிழராக இல்லாமல்
அடிமையாகக் கிடந்த காலமே அதிகம்.
உதயத்தின் கதிர்கள் முகத்தில் அடிக்கிறது.
இனியெமக்கு உச்சிக்காலம்,
ஆனையிறவின் மீதுலவும் உப்புக்காற்றே
உன் வருடலுக்காகவே உயிர்வாழ்ந்தோம்.
தாயே? நீயெம்மைத்தழுவி
எத்தனை வருடங்களாயின?
ஓடிவந்து எம்மை ஆலிங்கனம் செய்க.
உப்பளக்காற்றே!
உனக்கு அதிகவிலை கொடுத்தோம்.
வன்னியில் அடைவைத்துப் பொரித்த குஞ்சுகளுடன்
தாய்க்கோழி தலைநிமிர்ந்து வருகிறது.
வெண்ணிறப் புரவியேறி
பிள்ளைகளே விரைந்து வருக.
கண்ணிலொற்றிட உம் காற்தடங்கள் வேண்டும்.
கூண்டைத் திறந்து குதிக்கிறது
சுதந்திரத்தின் சுவாசக் காற்று.
காண்டீபத்தின் நாணொலி கேட்கிறது.
பகையே! உன் தலைகிள்ளிப் போக
வருகிறது நாகாஸ்த்திரம்.
விதியுள சோதனைச் சாவடிகளே?
சேதியறிந்து ஏதுசெயப் போவீர்?
நில்லென எமை நிறுத்தி நிகழ்த்திய கூத்துகளுக்கு
பிள்ளைகள் தீர்ப்பெழுத வருகின்றனர்.
அழுத வாழ்வு முடிந்ததென
எழுத வருகிறது காற்று.
துயருற்ற வாழ்வு தொலைந்ததென
வந்து பாடுகிறது வசந்தக்குயில்.
கவிதை நமக்கெனக் கையளித்து
காலம் நடக்கிறது கைவீசி.
துயிலுமில்லம் உழுதவனே!
தொலைந்தாயடா.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்